

தியாக
பொம்மைகள்
நலோமி

# தியாக பொம்மைகள்

(சிறுகதைத் தொகுப்பு)

**நெலோமி**

**விபுலம் வெளியீடு**
**இல.154, 2ம் கட்டை**
**மன்னார் வீதி**
**வேப்பங்குளம், வவுனியா.**

| | | |
|---|---|---|
| நூல் | : | தியாக பொம்மைகள் |
| விடயம் | : | சிறுகதைகள் |
| ஆசிரியர் | : | திருமதி.அ.நெலோமி |
| முதற்பதிப்பு | : | 2008 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| அச்சுப்பதிப்பு | : | மல்ரிவிஷன் அச்சுக்கலையகம் |
| அட்டை வடிவமைப்பு | : | S.J.ஜெயசிறி |
| ஓவியங்கள் | : | திருமதி.அ.நெலோமி |
| கணனிப் பதிப்பு | : | திருமதி.செ.ரஜனி |
| வெளியீடு | : | விபுலம் வெளியீட்டகம், மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா. |
| விலை | : | ரூபா 150 |

| | | |
|---|---|---|
| Title | : | Thiyaga Pommaikal |
| Author | : | Mrs.A.Nelomi |
| Fist Edition | : | 2008 |
| Publisher | : | Vipulam Publication |
| Lay out | : | Mrs.S.Rajani |
| Art | : | Mrs.A.Nelomi |
| Printing | : | Multivision Printers, 73D, 2nd cross Street, Vavuniya. |
| Price | : | 150/= |
| ISBN | : | 978 - 955 - 99420-1-6 |

# சமர்ப்பணம்

தன் அகலச் சிறகுக்குள்

அரவணைத்து

அன்பு செய்த எம்

அருமைத் தந்தைக்கு

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசியுரை | 5 |
| நெலோமியும் அவரது படைப்புகளும் பற்றி..... | 6 |
| என்னுரை | 10 |
| அவஸ்தை | 12 |
| உயிர்ப்பு | 18 |
| அவனுக்குத் தெரியும் | 24 |
| தியாக பொம்மைகள் | 31 |
| கோயில் உள்ள ஊர் | 36 |
| பயணம் | 45 |
| போலிகள் | 53 |
| சண்டைவரப்போகுது | 58 |
| பெரியபிள்ளை | 65 |
| பால்வெள்ளை | 70 |
| தூரோகம் | 79 |
| தொல்லைபேசி | 86 |

# ஆசியுரை

வ/நெளுக்குளம் கலைமகளின் தமிழ்மகளின் கன்னிக் கதையாக்கத்திற்கு ஆசியுரை வழங்குவதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இலக்கிய உலகில் இவ்வாசிரியை ஏற்கனவே கவிதைத் துறையில் கால்பதித்து நடைபயிலுகின்ற போதும் சிறுகதைகளை எழுதித் தொகுத்து வெளியீடு செய்வது இதுவே முதல் முறையாகும்.

எமது பாடசாலையின் துடிப்பு மிக்க தமிழாசிரியை என்ற வகையில் இவரது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் விசேட தன்மை கண்டும் தமிழ் மன்றத்தின் தரமான நிகழ்வுகள் கண்டும் இவரது ஆக்க இலக்கிய ஆற்றல்கள் தொடர்பாக அளவளாவிய போது எழுத்துலக ஆர்வத்தையும் அவர் எழுதி வெளியிட்டுள்ள கவிதைத்தொகுதி பற்றியும் வெளியிடத்தீர்மானித்துள்ள சிறுகதைத் தொகுதி தொடர்பாகவும் தெரிந்து கொண்டேன்.

எமது அன்றாட வாழ்க்கையில் எதிர்நோக்கும் சமூகப் பொறுப்பற்ற சம்பவங்களாலும், கலாசார சீரழிவுமிக்க மனித நேயமற்ற வாழ்வியல் முறைகளாலும் இவரது உள்ளத்திலெழுந்த உணர்வலைகளின் வெளிப்பாடாய் உருவாகிய சிறுகதைகள் நல்ல முறையில் நூலாகி சிறப்பாக வெளியீடு செய்யவும், இவரது படைப்பிலக்கிய ஆற்றல் மென்மேலும் விருத்தியடைந்து எதிர்கால வாழ்வு இனிதாய் அமையவும் எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

நன்றி

திரு.சு.அமிர்தலிங்கம்
அதிபர்
வ/நெளுக்குளம் கலைமகள் ம.வி

# நெலோமியும் அவரது படைப்புகளும் பற்றி......

1970ஆம் ஆண்டு காங்கேசன்துறையிலே பிறந்த நெலோமி, நாவண்ணன் (1947-2006) டொலறோஸ் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியாவார். மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியிலே கற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைத்துறைப் பட்டதாரி (1991-1994). பேராசிரியர்களான கா.சிவத்தம்பி, அ.சண்முகதாஸ், நா.சுப்பிரமணியம், எஸ்.சிவலிங்கராஜா ஆகியோரிடம் தமிழ் பயின்றவர். யாழ் பல்கலைக்கழக புவியியல் சிறப்புப் பட்டதாரியும், வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளரும், இலக்கிய ஆர்வலருமான அன்ரனி குருஸ் அவர்களின் வாழ்க்கைத்துணைவி. இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் கல்விபயிலும் லாவண்யா, அமிர்தாஞ்சன் இருவரதும் அன்னை. வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, செட்டிகுளம் மகாவித்தியாலயம் என்பனவற்றின் முன்னாள் ஆசிரியை, நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலய தற்போதைய ஆசிரியை, தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கும் எழுத்தாளர், சிறந்த ஓவியர். இவை இவரைப்பற்றிய வாழ்க்கைச் சுருக்கக் குறிப்புகள்.

ஆக்க இலக்கியங்களான கவிதை, சிறுகதை என்பனவற்றிலே முதலில் கவிதைத்துறையிலேதான் நெலோமி தமது முத்திரையைப் பதித்தார். இவரது முதற்படைப்பு, ஆத்மாவின் இராகங்கள் எனும் கவிதைத் தொகுப்பு (மார்கழி 2005). வடமாகாண இலக்கிய விழாவிலே (2007) வவுனியா மாவட்ட அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகள் எனும் தலைப்பில் எம்மால் சமர்ப்பிக்கப்பட்ட தன் மூலம் ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்திலே நெலோமியும் ஒருவராகப் பதியப்பட்டுள்ளார்.

04.03.2006 சனிக்கிழமை வவுனியா செட்டிகுளம் மகாவித்தியாலயத்தில் நெலோமி அன்ரனி குருஸ் அவர்களின் ஆத்மாவின் இராகங்கள் நூல் வெளியிடப்பட்டது. நூலுக்கு நயவுரை நிகழ்த்தும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்தது. கவிஞர் நாவண்ணன் அவர்கள் கலந்துகொண்ட இறுதிக் கூட்டமும் இதுதானென்று நினைக்கின்றேன். தந்தையின் கவித்துவத்தை மகளின் நூலிலும் கண்டேன்.

அடுத்து, எமது வாழ்கையுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடைய இன்னோர் இலக்கிய வடிவம் சிறுகதை எனலாம். நெலோமி அவர்கள் இதிலும் கைதேர்ந்தவர் என்பதை அவருடைய "தியாக பொம்மைகள்" எனும் சிறுகதைத் தொகுப்பு வெளிப்படுத்தியிருக்கின்றது. சொல்லப்போனால் ஆத்மாவின் இராகங்களிலும் பார்க்க தியாக பொம்மைகள் சிறுகதைகள் ஆற்றல் மிக்கனவாகத் தெரிகின்றன.

நெலோமி அவர்களுக்கு சிறுகதை எழுதுவதற்கான களமாக ஆரம்பத்தில் கத்தோலிக்க பாதுகாவலன் பத்திரிகை விளங்கியிருக்கின்றது. 1988 -89 காலப்பகுதியில் இப்பத்திரிகையில் இவரது "எறும்பூர" முதலான 05 கதைகள் வெளிவந்துள்ளன. இதன் பின்னர் 1995 இல் தினமுரசு பத்திரிகையில் "இவரது பாட்டியோடு பேசவேண்டும்" எனும் சிறுகதை வெளிவந்தது. இப்போது வெளிவந்திருக்கும் சிறுகதைகளுக்கு முன்னோடிகள் மேற்குறிப்பிட்ட கதைகளே.

இந்தச் சிறுகதைத் தொகுப்பிலே அவஸ்தை, உயிர்ப்பு, அவனுக்குத் தெரியும், தியாக பொம்மைகள், கோயில் உள்ள ஊர், பயணம் போலிகள், சண்டை வரப்போகுது, பெரியபிள்ளை, பால்வெள்ளை, துரோகம், தொல்லைபேசி ஆகிய பன்னிரண்டு சிறுகதைகள் உள்ளடங்கியுள்ளன. இவற்றில் சில அண்மை ஆண்டுகளில் உலக ஆசிரியர் தினம், மாவட்ட இலக்கியவிழா என்பனவற்றில் 1ம், 2ஆம் இடங்களைப் பெற்றவை. ஏனையவை அவ்வப்போது எழுதப்பட்டவை.

அனைத்தக் கதைகளுமே ஊன்கலந்து, உயிர்கலந்து உணர்வுபூர்வமாக எழுதப்பட்டவையாகத் தெரிகின்றன. அன்றாடம் நாம் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் மற்றும் நாம் பார்த்த, கேட்ட விடயங்கள் கதைப் பொருளாக அமைந்துள்ளமையால் ஈடுபாட்டோடு வாசிக்கக் கூடியனவாக உள்ளன. உயிரோட்டமுள்ள பேச்சு நடைகலந்த உரையாடல்கள், நகைச்சுவை, உளவியல் தத்துவம், விழுமியம் சார்ந்த கருத்துக்கள், காரணகாரியத்துடனான கதைப்பின்னல், திருப்தியை அளிக்கும் முடிவு என்பன கதைகளின் தரத்தை உயர்த்தியுள்ளன. ஒரு கதையைப் படித்து முடிப்பதற்கு அரைமணிநேரம் கூடத் தேவையில்லை.

பன்னிரண்டு கதைகளில் ஐந்து கதைகள் மாணவர், ஆசிரியர் ஆகியோரது கற்றல், கற்பித்தல் அனுபவம் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பானவை. இவ்வகையிலே அவஸ்தை, அவனுக்குத் தெரியும், தியாக பொம்மைகள், பயணம், பெரியபிள்ளை என்பன அமைகின்றன.

நெலோமி திறன் தகவுடைய ஓர் ஆசிரியையாகப் பணிபுரிந்து கொண்டிருக்கின்றமையால் மாணவரின் அடிப்படைத் தேவைகள், தனியாள் வேற்றுமைகள், அவர்களுக்கான ஊக்குவிப்புக்கள், தண்டனைகள், ஆலோசனை வழிகாட்டல்கள், ஆசிரியர்களின் அர்ப்பணிப்புக்கள் என்பன தொடர்பாக நிறைந்த விளக்கமுடையவராய் உள்ளார். இவற்றைத் தக்க முறையில் தமது கதைகளில் பயன்படுத்தியமை தெரிகிறது.

அவஸ்தை எனும் சிறுகதையிலே "ஏன் கண்கலங்கி இருக்குது?", "பாத்ரூம் போகப் போகிறீரோ?" என்பன அடிப்படைத் தேவையைக் கவனத்திற்கு கொண்ட வினாக்கள் "குட்மோர்னிங் பிள்ளைகள்", "தம்பி உம்மட பெயர் என்ன?", "சரி போயிற்று வாரும்" மனோரஞ்சிதம் ரீச்சரின் இந்தக் கூற்றுக்கள் நல்ல ஊக்குவிப்புக்கு எடுத்துக்காட்டு. "முழங்காலில் இருத்திவிடுவார்கள்", "கணிதபாடத்திற்கு வகுப்பிற்கு வருகிறார் என்றால் வயிற்றைக்கலக்கும்", "அவரது வாயும் பிரம்பும் ஒன்றாகப் பேசும்", "மாணவர்கள் வெடவெடவென்று நடுங்குவார்கள்", "பெண்பிள்ளைகளை கரும்பலகையைப் பார்க்க விட்டு விட்டு பளீர் பளீர் என்று பின்பக்கத்தில் கொடுப்பார்" என்று தண்டனையின் கொடுமையை எடுத்துக்காட்டுகிறார்.

தியாக பொம்மைகள் எனும் கதையில் வரும் சுமித்திரா ஆசிரியையின் தியாகம் இவ்வாறு காட்டப்படுகிறது. "என்னப்பா இன்னும் படுகேல்லையோ?" "இல்லை நாளைக்கு கட்டாயம் பேப்பர் கொடுக்க வேணும்" லேசாகக் கண்ணயர்ந்து போனாள். கனவில் கணவன், குழந்தைகள், அதிபர், பிள்ளைகள் மிதந்து மிதந்து வந்தார்கள். பாடசாலை மணி கணீர் கணீர் என அடிக்கிறது. வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். கண்கள் சுவர்க்கடிகாரத்தை நோக்கின. நேரம் அதிகாலை நான்குமணி... ஓ காலைச்சாப்பாடு செய்ய வேண்டும்.

முன்கட்டிளமைப் பருவம் பெண்பிள்ளைகளுக்கான ஆலோசனை வழிகாட்டலுடன் கூடிய நகைச்சுவைக் கதை பெரிய பிள்ளை என்பது. இதனையும் ஒருதடைவை படித்துப்பாருங்கள்.

"பசியும் பாலியலும் உலகை ஆளும்" என்பது பிராய்டின் தத்துவம் நெலோமியின் சிறுகதைகளிலே பாலியற்கருத்துக்கள் கதைக்குத் தேவையான அளவிலே பயன்படுத்தப்பட்டுள்ளமை சிறப்பம்சம். சிறுகதைக்கு என்றவகையில் வர்ணனைக் குறைவு, இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு இவரது துரோகம் எனும் சிறுகதை. இதிலே வரும் கனகு என்ற தலைமைப் பாத்திரம் இடுப்புவரை அடர்ந்த கூந்தல், வழு வழு என்ற கைகால்கள் வர்ணிக்கப்படுகிறது. அவன் (மூன்றாவது வீட்டுக் கதிரேசன்) கனகுவைக் கண்களால் மேய்ந்து கொண்டிருந்தான். "மறக்கவேண்டாம் கட்டாயம்...." என்று கூறி கனகுவின் பின்பக்கத்தில் செல்லமாகத் தட்டிவிட்டுச் செல்கிறான்; என்பன பாலியற் கருத்துக்களுக்கு தக்க எடுத்துக்காட்டுகள்.

தத்துவக் கருத்துக்களும் ஆங்காங்கே பளிச்சிடுகின்றன. "எல்லோரும் ஆலோசனை வழங்கினார்கள். ஆனால் அவரது தினசரிப்

பயணம் இனியும் தொடரத்தான் போகின்றது என்பது யாருக்குமே புரியவில்லை." -பயணம், "இன்னும் எத்தனை நாளைக்கு பிள்ளையாரப்பா" - துரோகம். "பத்துவருடங்களாக காத்திருந்து காத்திருந்து கலங்கிய மனிசன் பிணமான பின்பும் காத்திருந்தார்"- போலிகள். என்பன நெலோமியின் தத்துவக் கருவூலங்கள் உயிர்ப்பு, பால் வெள்ளை என்பன உயர்ந்த மனிதாபிமானம், தியாகம் என்பனவற்றை உணர்த்தும் விழுமியக்கதைகள்.

நாட்டின் யுத்த சூழலானது பயணம், சண்டைவரப்போகுது ஆகிய சிறுகதைகள் மூலம் காட்டப்படுகின்றது. வவுனியா நகரிலிருந்து செட்டிகுளம் நோக்கி பயணம் செய்கின்றவர்களுக்கு மனதில் ஏற்படும் அச்சத்தை சம்பவத்துடன் தொடர்புபடுத்திக் காட்டும் திறன் ஆசிரியருக்கே உரியது. "நெடுகலும் இப்பிடி பயந்து சாகேலுமே கெதியில வேற பள்ளிக்கூடம் மாறவேணும்". இரண்டு வாரங்களுக்கு முன்னர் அவ்வீதியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக வீசப்பட்டிருந்த சடலங்கள் கண்முன்னால் நின்று பயமுறுத்தின. வெட்டப்பட்டு, முகம் எரிக்கப்பட்டு - பயணம். "எத்தின தரமப்பா உங்களுக்குச் சொல்லுறது மெதுவாய் கேளுங்கோ எண்டு. கேற்றடியில பாருங்கோ ஆமிக்காறன் நிற்கிறான் - சண்டை வரப்போகுது. என்பன காலத்தின் கண்ணாடி.

இத்தகைய அச்சம் நிறைந்த சூழலுக்கிடையிலும் எங்கள் அமைதியைக் குலைக்கும் நிகழ்வுகள் ஏராளம். இதற்கு இவரின் கோயில் உள்ள ஊர், தொல்லைபேசி என்பன சில எடுத்துக்காட்டுக் கதைகள்.

நிறைவாக சிறுகதைக்கே உரிய கதையின் கருப்பொருள் *(Theme)*, நோக்கம் *(Purpose)* கதைப் பின்னல் *(Plot)* ஒருமைப்பாடு *(Unity)*, பாத்திரப்படைப்பு *(Character)*, நடப்பியற் பண்பு *(Realism)* முதலான பண்புகள் நெலோமியின் தியாக பொம்மைகள் தொகுப்பில் உரியவாறு அமைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கனவாகும். கவிதை, சிறுகதைத் துறைகளிலே தமது ஆளுமையினைக் காட்டிய நெலோமி அன்ரனிகுரூஸ் அவர்கள் வன்னி மண்ணின் மணங்கமழக் கூடியதாக உயரிய நாவலையும் படைத்து புகழ்பெற வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

**மு.கௌரிகாந்தன்**
**விரிவுரையாளர்.**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி**

# என்னுரை

எப்போதாவது எழுதுகிறேன். ஏதோ ஒரு வடிவத்தில் எழுதுகிறேன். அப்போதெல்லாம் அந்த எழுத்துக்களின் பின்னணியில் என்னை ஒரு சம்பவம் பாதித்திருக்கும் என மன ஆதங்கத்தைக் கொட்டித் தீர்ப்பதற்காக மட்டுமே எழுதப்பட்ட கதைகளில் சிலவற்றை ஆசிரியர் தினம், பிரதேச இலக்கியவிழா போட்டிகளுக்கு அனுப்பினேன். பரிசுகளும் கிடைத்தன. அவை அக்கதைகள் குறித்த ஓரளவு திருப்தியை எனக்குத்தந்தன.

நான் சார்ந்த ஆசிரியர் சமூகத்தைப் புறந்தள்ளி எழுதமுடியவில்லை. இந்நூலுக்கான தியாக பொம்மைகள் என்னும் தலைப்பு ஆசிரிய சமூகத்தையே சுட்டி நிற்கின்றது.

பாடசாலைப்பருவத்தில் 87ம் ஆண்டில் பாதுகாவலன் பத்திரிகையில் ஏறும்பூர... என்னும் எனது முதல் சிறுகதை வெளிவந்தது. அக்கதையைப் படித்த அருட்தந்தை ஜெராட் அவர்கள் மன்னாரில் படித்துக் கொண்டிருந்த எனக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு பாராட்டுக்கடிதம் எழுதினார். அப்பாராட்டுக்கடிதம் எனது பதினேழாவது வயதில் அகில உலகரீதியில் வெற்றிபெற்று விட்ட மகிழ்ச்சியைக் கொடுத்தது.

தொடர்ந்து எனக்கு ஊக்கம் கொடுத்தவர் எனது அன்புக்குரிய தந்தை. இதற்கு முன்னர் நான் வெளியிட்ட ஆத்மாவின் இராகங்கள் கவிதைத் தொகுப்பை விரைவில் வெளியிடவேண்டும் என்று துடியாகத் துடித்தவர் எனது தகப்பன். அந்த நூல் வெளிவந்த ஒரு மாதத்தில் அவர் எம்மை விட்டுப் பிரிந்தபோது தான் அவரின் துடிப்புக்கான அவசரத்தைப் புரிந்து கொண்டேன். அவரை நினைக்கும் ஒவ்வொருகணமும் நெஞ்சு விம்மிப்புடைத்துக் கண்ணீர் கொப்பளிக்கின்றது. அந்தக் கண்ணீரையெல்லாம் வெளியே விட்டுவிடாமல் அடக்கி வைத்து அதை ஒரு காவியமாகக் கொட்டும் வரை என்மனதிற்கு சாந்தி கிடையாது. என்னுள்ளே இருந்து ஒலித்துக்

கொண்டிருக்கும் அவரின் குரலின் கட்டளையில் இந்த தியாக பொம்மையை வெளியிட முனைப்புற்றேன். அவரின் ஆவலை நிறைவேற்றுவதில் எனக்குள் ஆத்ம திருப்தி.

என் தந்தையைப் போலவே என்றும் என்னை உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கும் என் வாழ்க்கைத் துணை. அவர்துணையின்றி என்னால் ஒரு அடிகூட நகர்ந்திருக்க முடியாது.

நூலுக்கான ஆலோசனைகளையும், அணிந்துரையையும் வழங்கிய வவுனியா கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திரு.மு.கௌரிகாந்தன் அவர்களும், ஆசியுரை வழங்கிய வ/நெளுக்குளம் கலைமகள் ம.வி அதிபர் திரு.அ.அமிர்தலிங்கம் அவர்களும் எனது நன்றிக்கு உரியவர்கள்.

இன்னும் கணினிப் பதிவு செய்து தந்த சக ஆசிரியை செல்வி.கு.சுஜித்ரா அவர்களுக்கும், அட்டைப்படத்தை அழகுற வரைந்து தந்த ஆசிரியர் திரு.*S.J.*ஜெயசிறி அவர்களுக்கும், நூலை அழகுறப் பதிப்பித்துத் தந்த மல்ரிவிஷன் அச்சுக்கலையகத்தாருக்கும் எனது நன்றிகள்.

என் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து கொண்டிருக்கும் உறவுகள், நட்பு இதயங்கள் அனைவரையும் நான் அன்புடன் நினைவுகூருகின்றேன்.

தியாக பொம்மையின் நிறைவுகளையும், குறைகளையும் சுட்டிக்காட்ட வேண்டிய சமூகப் பொறுப்பு வாசகர்களைச் சார்ந்தது.

நன்றி

- நெலோமி -



# 1 அவஸ்தை

பாலுவுக்கு அவஸ்தையாக இருந்தது. இடைவேளை நேரம் வருவதற்கிடையில் கொண்டு சென்ற ஒரு லீற்றர் தண்ணீரையும் குடித்துக் காலியாக்க வேண்டி ஏற்பட்டு விட்டது.

“எல்லாம் இந்த அம்மாவால் வந்த வினை”

மகனுக்காக வீட்டில் மதிய உணவைத் தயாரித்துக் கொண்டிருக்கும் தாயை நினைத்துக் கொண்டான்.

காலைச் சாப்பாட்டிற்கு அம்மா கிண்டித் தந்த உப்புமாவை நன்றாக சாப்பிட்டு வயிறு முட்டத் தண்ணீர் குடித்து விட்டு வந்தான். போதாத குறைக்கு பள்ளிக் கூடத்துக்கும் கட்டிக் கொடுத்து விட்டதை இரகசியமாக பாடவேளைக்கு இடையிலும் கிள்ளிக் கிள்ளிச் சாப்பிட்டு, ஈடுகட்ட தண்ணீர் குடித்து......இப்போது இடைவேளை முடிவதற்கிடையில் இயற்கை உபாதை முட்டிக் கொண்டு நின்றது.

பாடவேளையில் வெளியில் திரிந்தால் முழங்காலில் இருத்தி விடுவார்கள். வரதன் மாஸ்ரர் பாடத்திற்கு

வருவதற்கிடையில் போய்வர வேண்டும். அவரது பருத்த உருவமும், கறுத்த நிறமும் எப்போதும் பாலுவை பயமுறுத்திக் கொண்டிருந்தன. எப்போதாவது பளிச்சென்று சிரிப்பார். அப்போது அவரைப் பார்க்க அழகாக இருக்கும். மாணவர்கள் எல்லோரும் குஷியாகி விடுவர். ஆனால் அவர்தான் அடிக்கடி சிரிக்க மாட்டாரே. அவர் கையில் வைத்திருக்கும் பிரம்பை அப்படியும் இப்படியும் ஆட்டி ஆட்டிப் பேசுவார். ஆனால் இதுவரை அதைப் பயன்படுத்தியதை யாரும் பார்த்தது கிடையாது.

வகுப்பறை திடீரென்று நிசப்தமானது. இதுவரை அறிமுகம் இல்லாத ஆசிரியர் ஒருவர் பச்சை நிறச் சேலையில் சிரித்துக் கொண்டு வந்தார்.

"குட்மோணிங் ரீச்சர்"

"குட்மோர்ணிங் பிள்ளைகள் நான் உங்களுக்கு தமிழ் பாடத்துக்காக புதுசாக வந்திருக்கிறேன். என் பெயர் திருமதி மனோரஞ்சிதம்"

தொடர்ந்து பரஸ்பர அறிமுகங்கள் விசாரிப்புகள். பாலுவுக்கு நிலை கொள்ளாத தவிப்பு. புது ரீச்சரிடம் சொல்லிக் கேட்க வெட்கமாக இருந்தது. கண்கள் குளமாகின.

"தம்பி உம்மட பெயர் என்ன?"

"பாலு"

"ஏன் கண் கலங்கி இருக்குது?"

"ஒண்டுமில்லை"

"சரி இரும்."

ரீச்சர் இருக்கச் சொல்லி விட்டார். ஆனால் பார்வை அடிக்கடி பாலுவில் பதிந்து சென்றது.

பாலுவின் கால்கள் ஆடின. கைகள் அடிக்கடி மேசைக்குக் கீழே போய் வந்தன. கண்கள் கலங்கிக்... கலங்கி .... ரஞ்சிதம் ரீச்சர் பாலுவை அருகில் அழைத்தார்.

"பாலு உமக்கு என்ன பிரச்சினை"

.....................

"பாத்ரூம் போகப் போகிறீரோ...?"
அதற்காகவே காத்திருந்தவன் போல் பாலு பலமாகத் தலையை ஆட்டினான்.

"சரி போயிற்று வாரும்"
அடுத்த கணமே பாலு வேகமாக கழிப்பறை நோக்கி ஓடத் தொடங்கினான்.

ரஞ்சிதம் ரீச்சர் அவன் சென்ற திசையைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் நினைவில் இருபத்தியேழு வருடங்களுக்கு முன்னர் நடந்த நிகழ்வு படச்சுருளாக ஓடிக் கொண்டிருந்தது.

இதே போன்று ஒரு வேளை, இதே அவஸ்தையில் கூனிக் குறுகிய அந்த நிகழ்வு, மறக்க முடியாமல்........இப்போது நினைக்கும் போதும் கணபதிப்பிள்ளை மாஸ்ரர் மீதும், அவரது கணிதப் பாடத்தின் மீதும் ஏற்பட்ட வெறுப்பு நீங்காமல் இன்னும் கனன்று கொண்டிருக்கிறது.

நெடு நெடு என்று உயர்ந்த ஒல்லியான தோற்றம் கணபதிப்பிள்ளை மாஸ்ரருக்கே சொந்தமானது. எப்போதும் வெள்ளை வேட்டி, வெள்ளை அரைக்கைச் சட்டையுடன் காட்சி தரும் அவர் கையிலுள்ள பிரம்பு கர்ணனின் கவச குண்டலம் மாதிரி அவருடன் ஒட்டிக் கொன்டே இருக்கும்.

அவரின் முன்னால் நின்று பேசுகின்ற ஒவ்வொரு கணமும் பிரம்பின் அசைவை நோக்கிய படியே மாணவரின் கண்கள் இருக்கும்.

கணிதப் பாடத்துக்கு வகுப்பிற்கு வருகிறார் என்றால் வயிற்றைக் கலக்கும். வகுப்பில் ஏற்பட்டிருக்கும் மயான அமைதியைக் கிழித்துக் கொண்டு சிங்கம் போல் கர்ச்சிப்பார். சிலர் வெளியே எங்காவது ஒளிந்திருந்து விட்டு பாடம் முடிய வருவர். அப்படிப் பட்டவர்களை தேடிப் பிடித்துக்கொண்டு வருவார். மாணவர்கள் வெட வெட என்று நடுங்குவார்கள். அப்போது அவரது வாயும் பிரம்பும் ஒன்றாகப் பேசும்.

அப்போது நான்காம் வகுப்புப் படிக்கும் ரஞ்சிதத்திற்குப் பத்து வயது. அதே வகுப்பில் குண்டுச் சிவகரன், கறுப்பு ரகு, மொக்கு

ஜெயபால், கோமாளி யோசேப்பு, யோண்சன், சியாமிளா, யசிந்தா, திலகா, மொணிற்றர் நந்தினி என்று அவரிடம் அடிவாங்காமல் தப்பியவர்கள் எவருமே இல்லை. பெண் பிள்ளைகளை கரும்பலகையைப் பார்க்க விட்டுவிட்டு பளீர் பளீர் என்று பின் பக்கத்தில் கொடுப்பார். ஒவ்வொரு அடிக்கும் வெள்ளைச் சீருடை மடிந்து மடிந்து பறந்து உள்ளாடைகளைக் காட்டும். அது வேறு அவமானமாக இருக்கும். ஆண்களில் யோசேப்பு தினமும் அடி வாங்குவான். அவர் அடிப்பதற்கு பிரம்பை ஓங்கும் போதே அலறிக் கொண்டு மேசைக்கு கீழே புகுந்து விடும் அவனை வெளியே இழுத்தெடுக்கும் போது பாவமாக இருக்கும்.

என்ன அதிஸ்டமோ என்னவோ இதுவரை ரஞ்சிதம் ஒரு அடி கூட அவரிடம் வாங்கியதில்லை. அவளது நோஞ்சான் உருவத்தைப் பார்த்ததும் அவருக்கு அடிக்க மனமில்லையோ, அல்லது பிதுங்கிக் கொண்டிருக்கும் விழிகளின் பரிதாபத்தை பார்த்தோ என்னவோ ரஞ்சிதம் இதுவரை தப்பிக் கொண்டே வந்தாள்.

அன்றும் வழக்கம் போல் கணபதிப்பிள்ளை மாஸ்ரரின் க(பி)ணக்குப் பாடம் நடந்து கொண்டிருந்தது. வெளியே மப்பும், மந்தாரமுமாக மழைத்தூறல் விழுந்து கொண்டிருந்தது. ரஞ்சிதாவுக்கு அவஸ்தை தொடங்கியது. இன்று பாலுவுக்கு ஏற்பட்ட அதே நிலமை.

நிமிர்ந்து பார்க்கவே பயம் தருகின்ற அவரிடம் போய் நிலமையைக் கூற முடியுமா? கணக்குப் பாடத்தில் புலன் செல்லவில்லை. வகுப்பறை நரகமாகப் பட்டது. கழிப்பறை நினைவு முட்டி மோதியது. இனியும் முடியாது. ஆண்களும் பெண்களும் நிறைந்திருக்கும் இந்த வகுப்பில் ஒரு அசிங்கம் நிகழ்ந்து அவமானப்படுவதை விட........ அவசரம் பயத்தை வென்றது. சிறுமி ரஞ்சிதம் மெல்ல எழுந்து கொண்டாள். பூனைக் குட்டியாகப் பதுங்கிப் பதுங்கி கணபதிப்பிள்ளை மாஸ்ரரின் முன்னால் சென்று நின்றாள்.

அவர் புருவங்களை நெரித்து என்ன? என்பது போலப் பார்த்தார்.

"வண்ணுக்குப் போகப் போறன் சேர்"

சிறுமி ஒற்றை விரலை உயர்த்திக் காட்டினாள்.

"ஏய் இடத்தில போய் இரு"

"உங்களுக்கு கணக்குப் பாடம் எண்டால் தான் வெளியில போற தேவை வரும்."

ரஞ்சிதம் வந்தது போலவே திரும்பவும் சென்று இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

கணக்குப் பாடத்துக்கு வராமல் ஒளிச்சுக் கொண்டு திரியிற ஜெயபாலனைப் போல என்னையும் சேர் நினைச்சுப் போட்டார்.

தனது எண்ணத்தை வெளிப்படுத்த முடியாமல் அந்த பிஞ்சு உள்ளம் புண்ணாகியது.

பத்து நிமிட அவஸ்தைப் போராட்டம் .ரஞ்சிதத்திற்கு அடிவயிறு வெடித்து விடும் போன்ற துடிப்பு வேதனை . கண்ணீர் துளிர்த்து விட்டது. முகம் வியர்க்கத் தொடங்கியது. மரண அவஸ்தையுடன் அந்த பிஞ்சு மீண்டும் எழுந்து கொண்டது.கணபதிப்பிள்ளை மாஸ்ரரின் பக்கத்தில் வந்து நின்றது.

"சேர் ...வண்ணுக்கு போகப் போறன்"

"ஏய் மணிஅடிக்க கொஞ்ச நேரம் தான் கிடக்குது. போய் இடத்தில இரு."

ரஞ்சிதத்திற்கு அழுகை தொண்டையை அடைத்தது. திரும்பவும் இருக்கையில் வந்து அமர்ந்தாள். குழந்தைகளின் தேவையை உணர முடியாத இராட்சதப் பிறப்பாக கணபதிப்பிள்ளை மாஸ்ரர் பாடம் நடத்திக் கொண்டு இருந்தார்.

சிறுமி ரஞ்சிதத்தின் கட்டுப்பாடு எல்லை மீறிப் போனது. அவமானத்தையும் ஏளனத்தையும் எண்ணிப் பார்க்கும் நிலையில் இல்லாமல் அவளது சீருடையும் இருக்கையும் மெல்ல மெல்ல நனைந்து கொண்டிருந்தது.

கணபதிப்பிள்ளை வாத்தியாரின் மேல் ஏற்பட்ட வெறுப்பு ஆயுளுக்கும் நிலைக்கும்படியாக அவளைத் தள்ளிவிட்டு அவர் பாடம் நடத்தி முடித்து சென்று விட்டார். வெள்ளை வேட்டி தரித்த கறுப்பு மனிதனாக சிறுமியின் மனதில் ஆழப்பதிந்து கொண்டார்.

இடைவேளை மணி அடித்தது. எழுந்து செல்ல முடியாத நிலையில் ரஞ்சிதம் கதிரையோடு ஒட்டிக் கொண்டு இருந்தாள். இடைவேளை பிஸ்கட் வழங்கப்பட்டது. சென்று பெற்றுக் கொள்ள முடியாத நிலை வேண்டாம் என்று மறுத்து விட்டாள். மொணிற்றர் நந்தினி அவளை வினோதமாகப் பார்த்தாள். இந்த பிஸ்கற்றை யாராவது வேண்டாம் என்று சொல்வார்களா? பலமுறை அழைத்து பார்த்து விட்டு இறுதியில் அவளே அருகில் வந்து கொடுத்துவிட்டுப் போனாள்.

அடுத்த இரண்டு மணித்தியாலங்கள் இருக்கையை விட்டு எழும்பாமல் தனது மானத்தைக் காப்பாற்ற போராடியதை நினைக்க... நினைக்க ...

ரஞ்சிதம் ரீச்சர் சிலிர்த்துக் கொண்டார். எவ்வளவு கொடுமையான நாள் அது. சின்னஞ் சிறுசுகளின் மனதை, உணர்வுகளை, தேவைகளை புரிந்து கொள்ளாமல் இந்த புனிதமான தொழிலைச் செய்வதில் எந்த விதமான பயனுமே இல்லை. கையில் பிரம்பு எடுப்பதால் மட்டும் தான் பிள்ளைகளைக் கட்டுப் படுத்தலாம் என்பதற்கு அப்பால் ஆசிரியரின் அன்பான அணுகு முறையால் நினைத்ததைச் சாதிக்கலாம். உயிரும் உணர்வும் உள்ள குழந்தைகளின் உறைவிடத்தை வதைக் கூடங்களாக மாற்றலாமா?

கணபதிப்பிள்ளை மாஸ்ரர் கணிதம் படிப்பித்தாரோ இல்லையோ ஒரு ஆசிரியர் எப்படி இருக்கக் கூடாது என்ற படிப்பினையை மனோரஞ்சிதம் ரீச்சருக்கு அவரது பத்து வயதிலேயே கற்பித்துக் கொடுத்து விட்டார்.

ரீச்சர் பார்த்துக் கொண்டிருந்தார். பாலு மீண்டும் வகுப்பறைக்கு ஓடி வந்து கொண்டிருந்தான். ரீச்சருக்கு அருகில் வந்ததும் நின்று கொண்டான். கண்களில் நன்றி உணர்ச்சி தெரிந்தது.

ரீச்சர் புன்னகைத்தார். நிட்சயமாக பாலுவுக்கு இந்த புது ரீச்சரைப் பிடித்திருக்கும்.

* * *



# 2 உயிர்ப்பு

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கிப் புறப்பட்ட இரவு நேரப் புகையிரதம், நெரிசலில் நிறைந்து வழிந்தது. அது அடுத்து வருகின்ற மூன்று தினங்களும் விடுமுறைக் காலம் என சொல்லாமல் சொல்லியது. கடைசி நேரத்தில் எப்படியோ முண்டியடித்து ஏறிவிட்டான் சுந்தரம். வசதியான இருக்கை கிடைக்கவில்லை காய்ச்சல் வேறு அனலாகக் கொதித்தது.

ரயில் அப்படியும் இப்படி அசைந்து.... அசைந்து...... சுந்தரத்துக்கு வயிறு குமட்டிக் கொண்டு வந்தது. தலையைச் சாய்த்தால் நன்றாக இருக்கும் போல......

இந்தப் பக்கம் யன்னல் கரையோரம் தலைமுடி வெளுத்துப் போன பெண்மணி, மறுபக்கம் இளம் தம்பதி ஒன்று தமக்குள் இரகசியமாக சிரித்துப் பேசிக்கொண்டு இருந்தனர். எதிர்ப் பக்கமாக அவன்.... மிகவும் நிதானமாக சிங்களப் புத்தகம் ஒன்றின் பக்கங்களைப் புரட்டிப் புரட்டி...... ஒரு கணம் அவனின் தோற்றம் சுந்தரத்தின் கண்களில் பட்டு நிலைத்தது.

'படித்தவன் போல'.... தனக்குள் நினைத்துக்கொண்டான். அழகாக வாரிப் படியவிடப்பட்ட தலைமுடி, அதில் கொஞ்சம் ஜன்னல் காற்றில் படபடத்து முன் நெற்றியில் ஒற்றைச் சுருளாக தொங்கிக் கொண்டிருந்தது. பிரயாணத்தில் கூட மடிப்புக் கலையாத அவன் உடைகள், கால்களில் விலையுயர்ந்த சப்பாத்துக்கள்.

'இவனும் என்னைப் போல நேர்முகப் பரீட்சைக்குத் தான் போய்ற்று வாறானோ......'

மேற்கொண்டு அந்த வாலிபனைப் பார்க்கவோ, சிந்திக்கவோ சுந்தரத்தால் முடியவில்லை. தலை கிறு கிறுத்தது. ஜன்னல் கரை என்றால் கொஞ்சம் தலை வைத்துப் படுக்கலாம் மனம் அங்கலாய்த்தது.

'அவனிடம் கேட்டால் என்ன...' எப்படிக் கேட்பது மொழி தெரியாதே... ஆங்கிலம் கூட பேசும் அளவுக்குத் தெரியாது. இந்தச் சிக்கல் பூதாகரமாக கிளம்பிய போது காய்ச்சலும் இருமலும் கூடவே அதிகரித்தது போன்ற உணர்வாக இருந்தது.சுந்தரம் பலமாக இருமினான் மார்பைத் தடவி விட்டுக் கொண்டான்.

அந்த இளைஞன் ஒரு தடவை நிமிர்ந்து பார்த்தான். அவன் பார்வையில் இருந்தது வெறுப்பா அலட்சியமா? இனம் கண்டு கொள்ள முடியவில்லை. மீண்டும் குனிந்து புத்தகம் படிக்கத் தொடங்கினான்.

இனி முடியாது கேட்டு விட வேண்டியது தான்.... மீண்டும் பலமாக இருமினான். ஒரு வேளை அவன் நிமிர்ந்து பார்க்கக் கூடும். இருமல் அதிகரித்தது. சுந்தரத்தின் நம்பிக்கை வீண் போகவில்லை. அவன் நிமிர்ந்து பார்த்தான். ஆனால் அவன் முகத்தில் வெறுப்பின் இரேகை பரவியிருந்தது. தனது கையில் வைத்திருந்த புத்தகத்தை படக்கென்று மூடிவிட்டு இவனைப் பார்த்தான்.

சுந்தரம் இவனை நோக்கி சைகையால் தனது பிரச்சனையை விளக்க முற்பட்டான். புறங்கைகளால் கழுத்தைத் தொட்டுக்காட்டி காய்ச்சலை உணர்த்தி, அவனது ஜன்னல் கரை இருக்கையைக் கேட்பதற்குள் போதும் போதும் என்று ஆகியது.

அந்த இளைஞன் என்ன நினைத்தானோ ...இவனது நலிந்த தோற்றம் அவனுக்குப் பிடிக்கவில்லையோ.... அவனுக்குள் கனன்று கொண்டிருந்த இனத் துவேசம் மனிதாபிமானத்தை கொன்று விட்டதோ என்னவோ ...அவன் கண்கள் வெறுப்பை காரசாரமாக உமிழ்ந்தன. சடாரென்று தன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். ஜன்னலோடு ஒட்டிக்கொண்டு தனது இருக்கையைப் பலப்படுத்திக் கொண்டான். கண்களையும் மூடிக் கொண்டான்.

சுந்தரத்திற்கு இயலாமையால் அழுகையே வந்து விடும் போல் இருந்தது. இடம் கிடைக்கவில்லை என்பதை விட அந்த இளைஞனின் பாராமுகம், மனிதாபிமானமற்ற செயல் கண்களைக் குளமாக்கியது. சட்டென்று தான் தனித்து விட்டது போன்ற உணர்வு பலமாக பற்றிக் கொண்டது. இந்நேரம் வீடாக இருந்தால் அவன் நோய்க்கு ராஜ மரியாதை கிடைத்திருக்கும், அம்மாவின் மடியில் தலைவைத்து பாதி வருத்தம் பறந்திருக்கும்.

சீ...இந்த ஜன்னல் கரைக்கு ஆசைப்பட்டு மூக்குடைபட்ட அவமானம்....ரணமாக வலித்தது.

நரகத்தில் இருக்கும் உணர்வுடன் எப்படியோ தன்னை அடக்கிக் கொண்டான். அவஸ்தையுடன் தனது மடியிலேயே மடங்கி உறங்கியும் போனான். விழிப்பு வந்த போது மதவாச்சி புகையிரத நிலையம் வந்திருந்தது. தலை நரைத்த பெண்மணி இறங்கிக் கொண்டிருந்தார். எதிரே இருந்த இளைஞன், பக்கத்தில் இருந்த தம்பதிகள் எவரையும் காணவில்லை. அவர்கள் அனுராதபுரத்திலோ எங்கேயோ இறங்கியிருக்க வேண்டும். அந்த இளைஞன் அமர்ந்திருந்த ஜன்னல் கரை, வயோதிபப் பெண் இருந்த ஜன்னல் கரை எல்லாமே தேடுவாரற்றுப் போய் இருந்தது. சுந்தரம் நகர்ந்து கரையோடு ஒட்டிக் கொண்டான்.

அவன் கண்கள் அந்த இளைஞன் அமர்ந்திருந்த இருக்கையை வெறுப்போடு நோக்கின. அவன் பார்வையில் ஜன்னல் கரைக்கும் அந்த இளைஞன் அமர்ந்திருந்த இருக்கைக்கும் இடையிலான சிறிய இடுக்குக்குள் ஏதோ ஒன்று கனமாக, தடிப்பாக செருகுப்பட்டுக் கொண்டு....... மெல்லச்சரிந்து அதை எடுத்த போது...... குட்டித் தலையணையாக அந்த "மணிபேஸ்" அவனைப் பார்த்து விழித்தது.

அனிச்சையாக அவன் கைகள் அதைப் பிரித்த போது பளீரென்ற சிரிப்புடன் அவன் புகைப்படம், அப்படியே மூடி தன் காற்சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டான்.

இரண்டு நாட்கள் அம்மாவின் உபசரிப்பில் காய்ச்சல் தணிந்திருந்தது. மேசையில் அந்த குட்டித் தலையணை இவனைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தது. அதற்குள் என்னதான் இருக்கும். சுந்தரம் நிதானமாக அந்த 'மணிபேசைப்' பிரித்து ஆராயத் தொடங்கினான். உள்ளே....

அடையாள அட்டை, தொழில் அட்டை, பெயர்... ஜெயந்தகுமார என ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. தையல் கடையில் காற்சட்டை தைக்க கொடுத்திருப்பான் போல... அதற்கான சிட்டை, ஒரு சில முத்திரைகள், ஏதேதோ பற்றுச்சீட்டுக்கள், கடதாசிகள், குறிப்புகள்.... நானூற்றி ஐம்பது ரூபா பணம், கொஞ்சம் சில்லறைகள்... அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போல் தலை முடியை பறக்கவிட்டுக் கன்னம் குழியச் சிரித்துக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணின் புகைப்படம் அவன் காதலியாக இருப்பாளோ....

இவ்வளவு விடயங்களையும் இந்தப் பை எப்படித் தாங்கிக் கொண்டு இருக்கிறது. அந்த ஜெயந்தகுமாரவின் உயிர் நாடியே இதற்குள் தான் இருக்கும் போல... அவன் நிலை இப்போது எப்படி இருக்கும்.... பாவம் தவித்துப் போயிருப்பான்.....

ஒருகணம் சுந்தரத்தின் உள்ளம் அவனை எண்ணிப் பார்த்தது. அவனது இளகிய மனம் அந்த சிங்கள வாலிபனுக்காக பரிதாபப் பட்டது. இதை அனுப்பினால் என்ன?

மனிதாபிமானமற்ற அவனுக்கு கடவுளாகக் கொடுத்த தண்டனை இது... மனது குழம்பித் தவித்தது.

இந்த இரண்டு நாளும் அவன் தனது 'உயிர்ப் பை' யைக் காணாமல் தவித்த தவிப்பே அவனுக்குக் கிடைத்த தண்டனையாக இருக்கட்டும். இதை திருப்பி அனுப்புவதுதான் மனிதாபிமானம்.

'இன்னா செய்தாரை ஒறுத்து அவர் நாண நன்னயம் செய்து விடல்' சட்டென்று படித்த குறள் நினைவுக்கு வந்தது. மனம்

திருப்திப்பட்டுக் கொண்டது. பேனாவை எடுத்தான். இனம், மதம், என்பவற்றிற்கு அப்பாற்பட்ட மனித நேயம் அங்கே வென்று கொண்டு இருந்தது.

......

ஜெயந்த குமாரவால் நம்பவே முடியவில்லை. கண்கள் ஆச்சரியத்தால் விரிந்து கொண்டன. ஐந்து நாட்களுக்கு முன்னால் புகையிரதத்தில் தவறவிடப்பட்ட "மணிபேஸ்" இதோ அவன் கண்முன்னால்... அப்படியே முழுதாக ஒரு துண்டுக் காகிதம் கூட குறையாமல் அலுங்காமல் நலுங்காமல் அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது.

அதைத் தவறவிட்டு விட்டு அவன் அடைந்த தவிப்பும் துயரமும் சொல்லி முடியாது. தற்போது தான் தபாலில் வந்து சேர்ந்திருந்தது. கூடவே தமிழில் ஒரு கடிதம். புரியவில்லை. எப்படியாவது அதைப் படித்து விடும் வேகம் அவனுள் வியாபித்தது. யாரிடம் கேட்பது? அலைந்து திரிந்து தமிழ் படிக்கக் கூடிய நபரைத் தேடிப்பிடிக்க நண்பகல் தாண்டி விட்டது. கடிதம் வரிவரியாக படித்துக் காட்டப்பட்டது. அவன் கண்கள் மெல்ல மெல்ல வியப்பில் விரிந்தன.

அன்புடன் ஜெயந்த குமார,

நான் சுந்தரம். உங்களோடு உங்கள் எதிரில் இருந்து புகையிரதத்தில் பயணித்தவன். நீங்கள் தவறவிட்ட உங்கள் உடமையை அனுப்பி வைக்கிறேன். இது இல்லாமல் நீங்கள் அடைந்த துயரத்தை என்னால் உணர முடியும். என் உடல் நிலை சரியில்லாமையால் உடனே அனுப்பிவைக்க முடியவில்லை. மன்னிக்கவும்.

இப்படிக்கு சுந்தரம்.

ஜெயந்த குமாரவுக்கு ஒருகணம் அனைத்து இயக்கங்களும் நின்றுவிட்ட உணர்வு, என் உடல் நிலை சரியில்லாமையால்...என அவன் குறிப்பிட்டிருந்த விடயம், குமாரவின் நெஞ்சை பாறாங்கல்லாக அழுத்தியது. தான் புகையிரதத்தில் இந்தப் பயணியோடு நடந்து கொண்ட விதம் நினைக்க நினைக்க அவமானமாக இருந்தது.

இன்று வரைக்கும் தான் செய்தது சரி என்று எண்ணிக் கொண்டிருந்தவன், தான் மிகத் துன்பப்பட்டு இடிபட்டு பிடித்த

இருக்கையை ...அதுவும் ஒரு தமிழனுக்கு விட்டுக் கொடுப்பதா? என்று எண்ணிக் கொண்டிருந்தவன். அதற்கும் மேலாக தனது நண்பனிடம் கூறியவைகள்.

“அவன் தான் எடுத்திருப்பான்...நான் இறங்கும் போது கூட பார்த்தேன் நித்திரை மாதிரி நடித்துக் கொண்டிருந்தான். அவன் பார்வையே சரியில்லை, கள்ளப் பார்வை ...கறுவல்...தமிழன்.”

ஜெயந்த குமாரவுக்கு வெட்கமாக இருந்தது. கூடவே வேதனையாகவும் ....தன்னுள் இருந்த மனிதாபிமானத்தையே மறைத்துவிட்ட இனத்துவேசத்தின் மீது ஆத்திரம் வந்தது. தனது செயல் எண்ணம் எல்லாம் அந்தத் தமிழன் மட்டில் மாறுபட்டுப் போனதை எண்ண தன்மீதே வருத்தமாக இருந்தது. அவன் கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது.

பேனாவை எடுத்தான். ஆங்கிலத்தில் எழுதினான்.

அன்புடன் சுந்தரம்

உங்களால் அனுப்பி வைக்கப்பட்ட எனது உடமையைப் பெற்றுக் கொண்டேன். எனது இதயம் நன்றியால் நிறைந்துள்ளது. உங்கள் கடிதத்தைப் படிப்பதற்கு மிகவும் சிரமப்பட்டேன். எனினும் உங்கள் நட்பைத் தொடர விரும்புகின்றேன்....

தனது உள்ளச் சுமையைக் கொட்டிக் கொட்டி பிராயச் சித்தம் தேடும் பாவனையில் எழுதினான். அவனுள் இருந்த ஏதோ ஒன்று நொருங்கிக் கொண்டிருந்தது. அவன் கண்கள் நன்றி உணர்ச்சியால் பனித்து எழுத்தை மறைத்தன.

கடிதத்தை மடித்து தபாலகம் புறப்பட்ட ஜெயந்த குமாரவின் நடையில் இனத்துவேசம் சரிந்து போயிருந்தது.

* * *



# 3 அவனுக்குத் தெரியும்

அற்புதமே அரும்பொருளே ஆதி மூலமே
பொற்பதங்கள் பற்றி உந்தன் பக்கம் வீழுவேன்.
சற்குருவே என்மனது சாந்தியாகுமா?
செப்புகின்ற என்குறைகள் தீர்ந்து போகுமா?

வாய் மெல்ல மெல்ல முணு முணுக்கிறது. அவளை அறியாமலேயே மனதில் உருவாகி உருப் போட்டுக் கொண்டிருந்த வரிகள் அவை. அது எப்படித் தோன்றியது, எப்போது மறையும் என்பது தெரியாது. அவளைப் பொறுத்தவரை அடிக்கடி இப்படி ஏதாவது தோன்றும், மறையும், பாதியில் நின்று போகும். எதையும் அவள் கண்டு கொள்வதே இல்லை. சில வேளை கவிதா என்கின்ற பெயரை சூடியிருக்கின்ற படியாலேயோ.

தூக்கம் வரவில்லை.புரண்டு படுக்கிறாள். தூரத்தில் மன்னாருக்கு செல்லும் பயணிகள் பேரூந்து இரைச்சல்... வீதியில் மாடுகள் படுத்திருக்கும் போல. இடைவிடாது கோணடித்துக் கொண்டு செல்கிறான். சன்னமாய் ஒலித்துக் கொண்டிருக்கும் கடிகார "டிக் டிக்" ஒலி..... எத்தனை மணியிருக்கும்? எழுந்து பார்ப்பதற்கு மனமில்லை. படுக்கைக்குப் போகும்

போது பதினொன்று அரை. விழிக்கும் போது கண் எரிந்த படியால் நான்கு மணித்தியாலங்களுக்குள் விழித்திருப்பேன் போல... மனம் கணக்குப் பார்த்தது.

பக்கத்தில் படுத்திருந்த சின்னவன் தமக்கையின் மேல் கால்களைப் போட்டு இறுக்கி வியர்வையில் நனைந்திருந்தான். இனி நித்திரை வராது என்று தீர்மானித்தவளாக எழுந்து இரு பிள்ளைகளையும் பிரித்து வசதியாக கிடத்தி விட்டு யன்னலை திறந்து விடுகின்றாள். பளீரென்று தெரிந்த நிலவும் உள்ளே வரத்துடித்த தென்றலும் சற்றேனும் மனப்பாரத்தை குறைத்திருக்க வேண்டாமோ.

பால் நிலவு பாதையிலே நிற்பது ஏனோ -அதை
பாதியாக்கி வீதியிலே விட்டவன் யாரோ?
கால்கடுக்க நீ நடந்து செல்வது எங்கே?
ஆதிபிரான் அடியிணையில் தஞ்சம் கோரவோ.

மீண்டும் மனம் பாடல் இயற்றத் தொடங்கியது. ஒரு நிமிடமாவது எதையாவது சிந்திக்காமல் இருக்க முடிகிறதா? சதா எதையாவது எண்ணி, புலம்பி, துவண்டு, சுருண்டு.... "சீ என்ன வாழ்க்கை இது".

விடிந்தவுடன் செய்யவேண்டிய காரியங்கள் நிறையவே இருக்கின்றன. பாடசாலை வேலைகள் தலைக்கு மேல். கவிதா ரீச்சர் என்றாலே கனபேருக்கு அலாதி பிரியம். அக்கம் பக்கத்தில் கணிசமான நல் அபிப்பிராயத்தைப் பெற்றிருந்தாள். பாடசாலையிலும் சரி அயலிலும் சரி எந்த விதமான வம்பு தும்புக்கும் போக மாட்டாள். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருப்பவள். இந்த சுபாவம் தானே அவள் கணவன் இரத்தினத்தை கட்டிப்போட்டு விட்டது. எங்கேயோ படித்துக் கொண்டு இருந்த அவளை காதலித்துக் கைப்பிடித்து தனது கிராமத்தின் குளத்தோடும் வயலோடும் சங்கமிக்கச் செய்துவிட்டானே! ஊருக்கு ஏற்ற இசைவாக்கம் விரைவிலேயே ஒட்டிக் கொண்டு விட்டது.

கணவனைத் திரும்பிப் பார்த்தாள். படுக்கையின் ஓரமாக ஒடுங்கிக் கொண்டு கிடந்த இரத்தினத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. "பாவம்" அவளை அறியாமலேயே வார்த்தை வெளிப்பட்டது. "எத்தனை சுமைகளைத்தான் அவரால் சுமக்க முடியும்"

படிக்கின்ற வயதில் தகப்பனை இழந்து, தானாகப் படித்து பல்கலைக்கழகம் சென்றது மட்டுமல்லாமல், சகோதரங்களுக்கு வழிகாட்டியவன். ஏணியாக நின்று இப்போது தனித்துப் போய்விட்ட அவனுக்குள் எத்தனை ஏக்கங்கள் இருக்கும்?

தனது குடும்பத்தின் சுகத்தைப் பாராமல் சகோதரங்களை ஆளாக்க வேண்டும் என்று உண்மையான பொறுப்புணர்வோடு இருந்த அவனுக்கு உறுதுணையாக நின்றவள் கவிதா. திருமணம் செய்த இத்தனை வருடங்களுக்குப் பின்னர் குடும்பக் கிளையில் கூடு கட்டியிருந்த குருவிகள் இறக்கை முளைத்து பறக்கத் தொடங்கிய பின்னர் தான் இரத்தினம் தனது குடும்பத்தின் நலனைத் தொலைத்து விட்டதை உணர்ந்து கொண்டான். அனைத்துமே எல்லை மீறிப் போய்விட்டன. தலைக்கு மேல் ஏறிநின்ற கடன் தொல்லையும், கழுத்தில் பேருக்கென்று அரைப்பவுண் நூலுடன் நின்றிருந்த கவிதாவின் கோலமும், பெற்றோரோடு சேர்ந்து இன்பத்தை தொலைத்துவிட்ட குழந்தைகளின் நிலையும் அதற்கு சாட்சிகளாக நின்றன.

வருமானம் போதவில்லை, மாதச்சம்பளம் கைகளில் வருமுன்பே வட்டிக்காரனிடம் காணாமல் போய் விடுகின்றது. பற்றாக்குறை... பற்றாக்குறை..... வாழ்கையில் எப்படிப் பற்றுவரும்? சதா போராட்டம், வாழ்க்கைக்கான உயிர்ப் போராட்டம், கவிதாவும் இரத்தினமும் தினமும் செத்துப் பிழைத்துக் கொண்டிருந்தார்கள்

பேருக்குத்தான் அரச உத்தியோகம். “உங்களுக்கு என்ன இரண்டு பேரும் வேலை செய்கிறீர்கள்” என்று பார்ப்பவர்கள் சொல்வார்கள். சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவிக்கும் தவிப்பு மற்றவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது. கடன்காரன் வரும் போது இருவரும் ஓடி ஒழியத் தொடங்கிவிட்டனர். இனியும் கடன் கேட்பது கௌரவக் குறைவு என்ற நிலைக்கு தள்ளப்பட்டு விட்டபடியால் பசியென்றாலும் பல்லைக் கடித்துக் கொண்டு இருக்கப் பழகிப்போன அவர்களுக்கு வாழ்க்கையில் என்னதான் பிடிப்பு இருக்கப் போகிறது. அன்றைய நாளுக்கான வழி என்ன என்று ஆராய்வதிலேயே மண்டையை பிய்த்துக் கொண்டிருந்தார்கள்.

பசி வறுமை கொடுமையாலே
வாடுகின்றேன் என் இறைவா.
நடு நிசியில் கண்ணுறக்கம்
இல்லாமல் மாளுகின்றேன்.
கசிந்துருகும் கண்ணீரில்
கண்திறந்து தேடுகின்றேன்
காருண்யம் ஆனவனே
நீ எங்கே தேடுகிறேன்.

சட்டென்று முன்பொருநாள் உருப்போட்ட கவிதை வரிகள் நினைவுக்கு வருகின்றன. கூடவே சூடான பெருமூச்சு அந்த நிலவையே சுட்டுவிடும் அளவிற்கு அனலாக வெளிவருகிறது.

'மூளை களைப்படையும் போது உயிர் வாயுவைப் பெறுவதற்காக இப்படி நீளமான பெருமூச்சு வருமாம்' எப்போதோ படித்த துணுக்கு ஞாபகத்திற்கு வந்தது. 'எனது மூளைக்கு என்று தான் ஓய்வு'.

அடுத்த தெருவில் அமைந்திருந்த பள்ளி வாசலில் 'வாங்கு' சொல்லத் தொடங்கி விட்டார்கள். நேரம் 4.30. இனி கவிதா வேலையைத் தொடங்கும் நேரம் வந்து விட்டது. ஆனால் என்ன வேலையைச் செய்வது?

வீடு வாசல் பெருக்கலாம், பாத்திரங்கள் விளக்கலாம், பிள்ளைகளைப் பாடசாலைக்கு ஆயத்தம் செய்யலாம், ஆனால்..... அவர்கள் வயிற்றுக்கு? இன்றைய நாள் ஏன்தான் விடிகிறதோ என்ற அங்கலாய்ப்பு கவிதாவுக்கு. நேற்றைய தினமே அரிசி முடிந்து விட்டது. முடிந்த அரிசியில் ஒரு மிச்சம் பிடிப்பு செய்ததால் காலை உணவுக்கு கஞ்சியாவது சமைக்கலாம். ஆனால் மத்தியானத்திற்கு என்ன செய்வது என்ற பதகளிப்பு நேற்று மாலையே தொடங்கி விட்டது.

பறவைகளின் கூவல்களும் கரையல்களும் கவிதாவுக்கு எந்தவிதமான இன்ப உணர்வுகளையும் தூண்டவில்லை.

புதுமைப்பித்தனின் 'ஒருநாள் கழிந்தது' சிறுகதை நினைவுக்கு வந்தது. அக்கதையில் முருகதாசரும் மனைவியும் எப்படியோ ஒரு நாளைக் கழித்து விட்டனர். ஆனால் நான் எப்படிக் கழிக்கப் போகிறேன் என்ற கேள்வி பூதாகரமாகிக் கொண்டிருந்தது.

கவிதா உப்புச் சப்பில்லாமல் மெல்ல மெல்ல இயங்கத் தொடங்கினாள். கிழக்கில் ஒளிக்கீற்று எட்டிப் பார்க்கத் தொடங்கியது. அவளையும் அறியாமலே கைகள் மேலே உயர்ந்தன. "கடவுளே நீதான் காப்பாற்ற வேண்டும்". கண்களில் துளிர்த்த நீரைச் சுண்டி எறிந்தாள்.

இன்று வழக்கு, இரத்தினத்தின் சகோதரன் வெளிநாடு போக என்று பட்ட கடன், கடைசியில் வெளிநாட்டு விடயமும் சரிவரவில்லை. பணமும் வந்து சேரவில்லை. கடனை அடைக்கவும் முடியவில்லை. பணத்தைக் கொடுத்தவன் சும்மா இருப்பானா? வழக்குத் தொடுத்து விட்டான். 'இண்டைக்கு என்ன செய்யப் போகிறார். கூட்டிலே ஏறிநின்று குற்றவாளி என்று ஒத்துக் கொள்வார். பணத்தைக் கட்டுவதற்கு தவணை கொடுப்பார்கள் தான். என்றாலும் எப்படிப் பணத்தைப் புரட்டுவது?'

மனம் தனக்குள்ளேயே புலம்பத் தொடங்கியது. பொழுது சுளீர் என்று எறிக்கத் தொடங்கியது. ஆங்காங்கே சந்தடிகள் களைகட்டத் தொடங்கி விட்டன. கவிதாவின் புலம்பல்களும் சிந்தனைகளும் தற்காலிகமாக பதுங்கிக் கொண்டன. கணவனையும் குழந்தைகளையும் துரிதப் படுத்தினாள். அடுப்பில் காலைக் கஞ்சி கொதித்துக் கொண்டிருந்தது.

"இஞ்சருங்கோ இண்டைக்கு என்னப்பா செய்யிறது?"

எதைக் கேட்கிறாள் இவள் வழக்கைப் பற்றித் தானோ...

"ஓமப்பா நானும் அதைப் பற்றித்தான் யோசிக்கிறன் பெரிய வெட்கக் கேடாய் இருக்குதப்பா"

"அதுக்கும் தான், நான் மத்தியானச் சாப்பாட்டுக்கு என்ன செய்யிறதெண்டு கேட்டனான்"

"அரிசி இல்லை என்ன?" என்ன செய்யிறது....ம்....சில வினாடிகளில் கனத்த மௌனம் கலைந்தது. அவன் கண்களில் திடீர் மின்னல்.

"இஞ்சப்பா அந்த வங்கிப் புத்தகத்த எடுங்கோ"

"அதில என்ன இருக்கு? ஏற்கெனவே எல்லாம் எடுத்தாச்சே"

"இல்ல கணக்க குளோஸ் பண்ணினா ஐநூறு எடுக்கலாம் தானே"

அலைகடலில் தத்தளிப்பவனுக்கு சிறிய மரக்கட்டையைக் கண்ட பரபரப்பு. இரத்தினத்தின் செய்கையில் தெரிந்தது. தானாகவே சென்று கணக்குப் புத்தகத்தைத் தேடி எடுத்தான்.

"லோயருக்கும் ஏதாவது குடுக்க வேணும். கொஞ்சம் சமாளிச்சுக் கொள்ளுங்கோ பின்னேரம் வரேக்க வாங்கி வாறன்" சமாளிப்பதா....நான் சமாளிக்கலாம்....பிள்ளைகள்...

"எனக்குப் பிரச்சனையில்லை, பிள்ளைகளை என்ன செய்யிறது, லோயருக்குக் குடுக்கவே காணுமோ தெரியாது"

"ஏதோ பாப்பம் .ஒண்டும் செய்யேலாது. முதல்ல போய்ப் பாப்பம்"

கூறிவிட்டு இரத்தினம் புறப்பட்டுப் போய் விட்டான். பாடசாலை தொடங்க நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. பிள்ளைகள் தயாராகி விட்டார்கள். அவர்களுக்கு கஞ்சியை ஊற்றிக் கொடுத்து விட்டு கவிதா தானும் தயாரானாள்.

"அம்மா பள்ளிக்கூடத்துக்கு கொண்டு போக சாப்பாடு?"

"கஞ்சியைக் கொண்டு போகேலாதம்மா, ஊத்துப்படும் இண்டைக்கு மட்டும் தானே சமாளியுங்கோ என்ன"

பிள்ளைகளின் கன்னம் தடவி, சமாதானம் செய்து வீட்டைப் பூட்டிக் கொண்டு மூவரும் ஓட்டமும் நடையுமாக பாடசாலையை நோக்கிச் செல்லவும் மணி அடிக்கவும் சரியாக இருந்தது.

ஏதோ புதிய பூமிக்கு வந்து விட்ட மாதிரி கவிதா அனைத்தையும் மறந்து இயங்கத் தொடங்கினாள். நேரம் பதினொரு மணி. இடைவேளை நேரம், பட்டாம் பூச்சிகளாகப் பிள்ளைகள் கன்ரீன் பக்கத்திற்கும், விளையாட்டு மைதானத்திற்குமாக பறக்கின்றனர். கவிதாவின் குழந்தைகளின் ஊசாட்டம் தாயைச் சுற்றியபடி தெரிகிறது. சின்னவன் பொறுமை கடந்து தாயைச் சுரண்டி காதுக்குள் இரகசியமாகக் கேட்கின்றான்.

"கன்ரீனுக்குப் போகப்போறன் காசு தாங்கோ"

"இல்லையப்பு வீட்டபோய் அப்பா வரவிட்டு தாறனப்பு"

காதுக்குள் தாயும் மகனும் குசுகுசுத்துக் கொள்கிறனர். தாயின் பதிலால் அதிருப்தியோடு காலை உதைத்து சிணுங்கிய மகனை சமாளிக்க தலையில் செல்லமாக தடவி, மூக்கைப் பிடித்து ஆட்டி, கன்னத்தில் கிள்ளி, அணைத்து எத்தனையோ சாலங்களைப் பண்ண வேண்டியிருந்தது.

நேரம் பன்னிரண்டை நெருங்கியது பாடசாலை வளவில் வந்து நின்ற வாகனம் உயர்தர மாணவர்களுக்கான சிறுவர் தொடர்பான கருத்தரங்கு நடைபெறப் போவதை நினைவு படுத்தியது. கவிதா பரபரப்பாகினாள். உயர்தரப் பிள்ளைகளை ஒழுங்கமைத்து கருத்தரங்கு மண்டபத்திற்கு அனுப்பினாள். தானும் அமர்ந்தாள்.

எல்லோரும் பிள்ளைகளின் நலன் பற்றிப் பேசுகின்றனர். கவிதாவின் மனம் மண்டபத்துக்கு வெளியே தன் பிள்ளைகளைச் சுற்றிக் கொண்டிருந்தது.

'என்ர பரம் பொருளே' என தவித்துக் கொண்டிருந்தது. மனம் கருத்தரங்கோடு ஒன்ற மறுத்தது.

ஒருவழியாக நிகழ்வுகள் நிறைவடைந்த போது நேரம் இரண்டைத் தொட்டுக் கொண்டிருந்தது. நிகழ்வை நடத்தியவர்கள் இறுதியில் அன்பான வேண்டுகோள் ஒன்றை விடுத்தனர்.

"இந்நிகழ்வில் பொறுமையோடு கலந்து கொண்ட உங்களைப் பாராட்டுவதோடு அனைவருக்கும் எமது சார்பாக மதிய உணவு வழங்கப்படும்"

என்ற அறிவிப்பைத் தொடர்ந்து கவிதாவின் கண்கள் திகைப்பில் விரிந்தன. வெள்ளை வெளேரென்ற சாப்பாட்டுப் பெட்டிகளில் ஆளுக்கொரு பொதி வழங்கப்பட்டது. மேலதிகமாக இருந்தவை என மீண்டும் ஒரு பொதி கவிதாவிற்கு வழங்கப்பட்டது.

கவிதாவின் கண்கள் பனித்தன 'என் பரம்பொருளே உனது கருணையின் வடிவம் இதுதானோ... அற்புதமே... அரும் பொருளே... ஆதிமூலமே... என மௌனப் பிராத்தனையில் மனம் விரிந்து.. விரிந்து.. துயரங்கள் அறுந்து...வெட்டவெளியாகிக் கொண்டிருந்தது. 'மரத்தை வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான், அவனுக்குத் தெரியும்' என்ற வார்த்தைகள் இதயமெங்கும் முட்டிமோதி எதிரொலித்துக் கொண்டிருந்தன.



# 4 தியாக பொம்மைகள்

முதுகுத்தண்டு "விண் விண்" என்று தெறித்து விழுந்தது. சுமித்திரா நிமிர்ந்து சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தாள். நேரம் பதினொன்றைத் தாண்டி விட்டிருந்தது. இன்னும் பத்துப் பதினைந்து விடைத்தாள்கள் மிச்சமிருந்தன.

எப்படியும் இன்னும் இரண்டு மணித்தியாலங்களாவது வேண்டும். மனதுக்குள் கணக்குப் பார்த்தபடி எழுந்து சமையலறைக்குச் சென்றாள். இரவுச் சாப்பாடு பாண் காய்ந்து போய் இருந்தது. மீன்குழம்பு லேசாக பழங் குழம்பு ஆகிக் கொண்டிருந்தது. ஒன்றிரண்டு துண்டுகளை வயிற்றுக்குள் தள்ளி விட்டு முகத்தையும் அலம்பிக் கொண்டு வந்த போது சுந்தரேசன் விழித்திருந்தான்.

"என்னப்பா இன்னும் படுக்கேல்லையோ"

"இல்லை நாளைக்கு கட்டாயம் பேப்பர் கொடுக்க வேணும்"

"ஒவ்வொரு நாளும் இதையே சொல்லிக் கொண்டு சாமக்கோழி மாதிரி இருக்கவேண்டியது. நான் இங்க ஒரு ஜென்மம் இருக்கிற நினைப்பு இருந்தாத்தானே"

சுந்தரேசன் தொடங்கி விட்டான். இனி அவனை அடக்குவது கடினம். நெஞ்சு விம்மிப் பெருமூச்சு ஒன்று அனலாக வெளிவந்தது.

இந்தப் பெரிய பாடசாலையில் படிப்பிக்க வந்த காலம் தொடக்கம் அவள் படுகின்ற துன்பங்கள் சொல்ல முடியாதவை. அதிக பிள்ளைகள் தொகை, அவளுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புக்கள், பரீட்சை எடுக்கப் போகும் வகுப்புகளுக்கு படிப்பிக்கும் அவளால் எந்தக் காரணத்தை முன்னிட்டும் நிம்மதியாக இருக்க முடியவில்லை.

சுமித்திரா ரீச்சர் என்றால் பிள்ளைகளுக்கு எப்போதும் விருப்பம். இயல்பாகவே கோபம் வராது. எப்போதும் இனிமையாகச் சிரிக்கின்ற அவள் பெயரில் சில குற்றச் சாட்டுக்களும் இருக்கத்தான் செய்தன.

“ரீச்சர் பிள்ளைகளுக்கு நல்லா இடம் கொடுக்கிறா”

“ரீச்சருக்குப் பிள்ளைகள் பயமில்லை”

“ரீச்சர் பிள்ளைகளைக் கொஞ்சம் கண்டிச்சு வையுங்கோ தலைக்கு மேல ஏறுவினம்”

இப்படியெல்லாம் ஏகப்பட்ட புத்திமதிகள். சுமித்திரா ரீச்சர் தனக்குள்ளே சிரித்துக் கொள்வாள். பிள்ளைகள் படிக்கிறார்கள், அன்பாலே சொன்னால் கேட்கிறார்கள். அவர்கள் ஏன் எனக்குப் பயப்பட வேண்டும்? அவர்கள் உரிமையோடு நெருங்கிப் பேசுவது எவ்வளவு பிரச்சைகளை சமாளிக்கக் கூடியதாக இருக்கிறது. எனது இயல்புக் குணத்தை மற்றவர்களுக்காக கடுமையாக மாற்றத்தான் வேண்டுமா? இப்படி எண்ணி எண்ணியே மாய்ந்து போவாள்.

வீட்டுப் பிரச்சனையுடன் வகுப்பறைக்குள் நுழையும் போதே குதூகல உணர்வைத் தந்து விடுகிறார்களே. பாடசாலை முடிகின்ற நேரம் வரை என்னையே மறந்து போகிறேனே. இந்த ஆத்ம திருப்தி வேறு எதிலே கிடைக்கப் போகிறது. சிலவேளை ஆத்திரம் வந்து திட்டுகின்ற போது அத்தனை பேரும் அதிர்ச்சியோடு திகைத்து நிற்கிறார்களே. அது போதாதா?

அன்றைக்கு ஒரு நாள் ......வகுப்பறைக்குள் நுழைந்த போது அழகியல் பாடத்தில் ஏதோ கை வேலை என்று செய்தவர்கள் சுமித்திரா ரீச்சர் வந்ததையும் கவனியாமல் மாலைகளையும் மணிகளையும் கோர்த்துக் கொண்டு இருந்தனர். அந்த இனிமையான செயற்பாட்டிலிருந்து விடுபட முடியாமல் ஏதேதோ வேலைகள் எல்லாம் செய்தனர். ஆத்திரம் தலைக்கேற அந்த முப்பத்தியாறு பிள்ளைகளின் முதுகில் ஆளுக்கு ஒரு அடி வீதம் வைத்துக் கொண்டு வந்தாள்.

வகுப்பு அமைதியானது. கனத்த நெஞ்சோடு கற்பித்தாள். ஆனால்.... பாடம் முடிந்த போது...... அந்தப் பிள்ளைகள் அவளை அணுகி அவள் கைகளைத் திருப்பிப் பார்த்து "ரீச்சர் கை வலிக்கிறதா? என்று கேட்டபோது முப்பத்தியாறு அடிகளும் அவள் முதுகில் பட்டது போன்ற வலியால் துடித்துப் போனாள். அவர்களை அணைத்துக் கலங்கினாள்.

சுவர்க் கடிகாரம் பன்னிரண்டு முறை அடித்து ஓய்ந்தது. "சீ.....திருந்த முடியாது போல இருக்கு மனம் சலிப்புற்றது. .சுந்தரேசன் மீண்டும் ஒரு தடவை தலை தூக்கிப் பார்த்தான்.

"என்னப்பா பன்ரண்டு அடிச்சிட்டுது. படுக்கேல்லையே"

"இன்னும் கொஞ்சம் இருக்குது"

"இதுதானே எனக்கு வாற விசர் எத்தின நாளாய் ஏமாத்திப் போட்டீர்"

"அதுக்கு என்னப்பா செய்யிறது"

"பகலில பிள்ளையளையும் கவனிக்கிறதில்லை இரவில் என்னையும்......"

பெருமுச்சு ஒன்று பெரிதாக வெளிவந்தது தொடர்ந்து ஏதேதோ புறுபுறுத்தக் கொண்டு இருந்தான். சுமித்தராவுக்கு புரிந்து விட்டது இவர் இன்று திருத்த விடமாட்டார். சீ.........

இந்த வேலையை விட்டுவிடலாம் போல இருக்குது.

சின்னவன் பாயில் "சூ" அடித்து விட்டிருந்தான். அது வழிந்து ஓடி காலடியை தொடவும் எழுந்து சாக்கை எடுத்து ஒற்றி எடுத்து அவனின் காற்சட்டையை மாற்றிய போது மனது 'பகீர்' என்றது. அவனின் ஒட்டிய வயிறும், துருத்திக் கொண்டிருந்த எலும்புகளும் "அம்மா நீ எனக்கு ஊட்டம் உள்ள உணவுகளைத் தந்தாயா?" என்று உரத்துக் கேட்டன.

இன்று மாலை பாடசாலை முடித்து வந்தபோது ஒழுகிய மூக்கோடு அவள் வரவை எதிர்ப்பார்த்து வாசலிலேயே காத்திருந்த குழந்தையின் ஏங்கும் விழிகள் கண்முன்னே வந்து நின்றது. கண்களில் துளிர்த்த நீரைத் துடைத்து பிள்ளையின் கன்னத்தில் குனிந்து முத்தமிட்டாள்.

சுந்தரேசன் மெதுவாகத் திரும்பி அவளின் கரங்களை பற்றினான்.

"விடுங்கோப்பா வேலையை முடிக்க வேணும்"

அவனின் பிடி இறுகியது.

"விடுங்கோ எண்டெல்லோ சொல்லுறன்"

வலுக்கட்டாயமாக அவனுடைய கரங்களைப் பிடுங்கி எறிந்தாள். மனம் படபடத்தது. அவளின் ஆத்திரம் அவனுக்கு அவமானத்தைக் கொடுத்திருக்க வேண்டும். மீண்டும் வலிமையாக அவள் கைகளை பற்றிய போது கை வலித்தது. மனம் வலித்தது அவள் கண்களில் இருந்து பொல பொல என்று நீர் கொட்டத் தொடங்கியது.

அவனின் பிடி தளர்ந்தது. கோபத்துடன் மறுபக்கம் திரும்பிப்படுத்துக் கொண்டான். சுமித்திராவுக்கு அழுகையை அடக்க முடியவில்லை. கேவிக் கேவி அழுதாள். தான் ஒருத்தி வேலைக்குப் போகத் தொடங்கிய பின்னர் வீட்டின் இயல்பு நிலை மாறி, பிள்ளைகள் பராமரிப்பு இன்றி, கணவனின் இயல்பான தேவைகளுக்கு ஈடு

கொடுக்க முடியாத, உணர்ச்சிகள் மரத்துப்போன தன் நிலையை எண்ணி எண்ணி அழுதாள். தலை பலமாக வலித்தது.

கணவனின் மார்பில் ஆறுதல் தேடலாம் போன்ற உந்துதல். ஆனால்.... பேப்பர் திருத்த வேண்டும்....... முடியவில்லை. மடிந்து அமர்ந்தாள் மிக லேசாக.... லேசாக கண் அயர்ந்து போனாள்... கனவில் கணவன், குழந்தைகள், அதிபர், பிள்ளைகள் மிதந்து மிதந்து வந்தார்கள். பாடசாலை மணி 'கணீர் கணீர்' என அடிக்கிறது.... வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். கண்கள் சுவர்க் கடிகாரத்தை நோக்கின. நேரம் அதிகாலை நான்கு மணி....

ஓ......காலைச் சாப்பாடு செய்யவேண்டும்......மனம் பரபரக்க மீண்டும் முடுக்கிவிட்ட பொம்மையாக இயங்கத் தொடங்குகிறாள்.

* * *



# 5 கோயில் உள்ள ஊர்

அதிகாலைப் படுக்கையில் சுருண்டு கிடப்பது போன்ற பேரின்பம் வேறு எதிலுமே இல்லை. கண்கள் மூடியும் மூடாமலும், விழிப்பும் துயிலுமாக இரண்டும் கெட்டான் சுகம்.

தூரத்தில் சேவல் கூவும் ஒலி, 'கீச்சுக் கீச்சு', 'கா...கா...'. எல்லாமே மெல்லிய ஓசைகளாகத் தாலாட்டி...தாலாட்டி, கண்கள் செருக, தூரத்தே 'கணீர்..... கணீர்...' முருகன் கோவில் மணியோசை.

இறை தியானம் சட்டென்று வந்து நெஞ்சில் நின்றது.

'முருகா எல்லோரும் வாழ வேண்டும்' மனம் எண்ணிக் கொள்கிறது. இந்த அமைதியும் சுகமும் இன்னும் சற்று நேரத்தில் சிதறடிக்கப்பட்டு விடும் என்ற நினைப்பு எனக்குள் சிறிய எரிச்சலை விதைத்து விடுகிறது.

ஒலிபெருக்கி சரிபார்க்கப் படும் சத்தம், அடுத்து நிகழப் போகும் பேரொலிக்கு கட்டியம் கூறுகிறது.

என் காதுகள் தயாராகி விட்டன. இதோ ஆரம்பித்து விட்டது.

“வேப்பிலையில் குடியிருப்பாள் பத்திர காளி-எம்
வேதனையைத் தீர்த்து வைப்பாள் பத்திரகாளி”

அருகில் இருந்த காளியம்மன் கோயில் ஒலிபெருக்கி மார்பில் அறைவது போல அலறத் தொடங்கி விட்டது. மனதிற்கு இதமாக ஒலிக்க வேண்டிய இறைவணக்கம், அதிகாலையின் அமைதியையும், ஆனந்தத்தையும் சிதறடித்து விட்டு காதுகளே செவிடு படும் படியாக எரிச்சலூட்டிக் கொண்டிருந்தது. இந்த எரிச்சல் இரவு எட்டு மணிவரை தொடரும்.

என்னவோ தான் தான் பக்திப் பிரவாகத்தில் மிதப்பதாகவும், தான் பெற்ற இன்பம் எல்லோரும் பெறவேண்டும் என்ற எண்ணமும் தான் பூசாரிக்கு. இல்லாவிட்டால் இப்படியொரு கதையை அவர் சொல்லி இருப்பாரா?

அம்மா பலமாக இருமுகிறார்

இரவு முழுவதும் உறக்கம் வராமல் மருந்து மாத்திரைகளுடன் அல்லாடி, உறக்கத்தை வலிய வரவழைத்து, அதிகாலை வேளையில் தான் உறங்கியிருப்பா. இதோ அவ எழும்பிவிட்டா இனி மார்பைப் பிடித்துக் கொண்டு ஓயாது குடல் தெறிப்பது போல இருமிக் கொண்டு இருப்பா. அம்மா உறங்கும் போது உறங்கி, விழிக்கும் போது விழிக்கும் அன்பான அப்பா, அவரும் விழித்திருப்பார்.

வாடகைக்கு வீடு தேடிய போது எல்லாவற்றுக்கும் வசதியாக பிரதான வீதியை ஓட்டினால் போல அடக்கமாக இந்த வீடு அமைந்து விட்டது.

கடைத் தெருவுக்கு, போக்குவரத்துக்கு, பிள்ளைகளின் பாடசாலைக்கு என்று எதுவித பிரச்சனையும் இல்லை. மேலதிக வசதியாக பக்கத்தில் கோயில் இருந்தது அம்மாவுக்கு பரமானந்தமாகப் போய்விட்டது.

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்காதே என்று அப்பா வேறு அம்மாவின் பக்கம் ஒத்துப்பாடி தமது சந்தோசத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

மன நிறைவோடுதான் இங்கு குடியிருக்க வந்தோம். ஆனால் வந்த ஒரு சில நாட்களிலேயே நிஜம் முகத்தில் அறைந்தது.

அதிகாலையிலேயே எல்லோரையும் தட்டியெழுப்பி விட்ட பக்திப்பாடல், அதைத் தொடர்ந்து ஆடு பாம்பே என்று தொடங்கி தனது மனதில் பட்ட பாடல்களையெல்லாம் பாடிப் பரவசமாகி, பகல் முழுவதும் ஓயாத நாதஸ்வரம், மத்தள ஒலிகள் ஆர்ப்பரிக்க தனது பக்திக் கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருப்பார் அர்ச்சகர்.

இங்கு அக்கம் பக்கம் உள்ளவர்கள் தமது கடமைகளை நிறைவேற்ற முடியாது தவித்துக் கொண்டிருப்பர்.

எப்போதும் மென்மையாக பேசும் மனைவி பெரும் குரலெடுத்து கதை சொல்லிக் கொண்டிருப்பாள்.

அப்பா வாய்க்கருகே காதைக் கொண்டு வந்து என்ன என்று கேட்பார்.

பிள்ளைகள் ஆடு பாம்பே பாடலுக்கு நடனமாடிக் கொண்டிருப்பர்.

நான் நாதஸ்வர சத்தத்தில் அமுங்கிப் போயிருக்கும் தொலைக் காட்சி வானொலிச் சத்தத்தை அதிகரித்துக் கேட்க முயற்சி செய்து கொண்டிருப்பேன்.

மொத்தத்தில் கோயிலாக மாற வேண்டிய குடும்பம் கோயிலால் நரகமாகிக் கொண்டிருக்கும். சனி ஞாயிறு தினங்கள் ஓய்வு நாளாக இல்லாமல் மன உளைச்சல் தரும் நாளாக அரங்கேறிக் கொண்டிருக்கும்.

சென்ற மாதம் இப்படித்தான் அம்மாவுக்கு முடியாமல் போய் விட்டது. முகத்தில் ஏகப்பட்ட குழப்ப ரேகைகள். அருகில் சென்ற எனது கையைப் பிடித்து அம்மா சொல்கிறாள்

“தம்பி உந்த சத்தத்தை கொஞ்சம் குறைக்கச் சொல்லு தம்பி தலையிடியாக் கிடக்கு”

“ஓமப்பா அதிக சத்தத்தால் சூழல் மாசடையுது. சூழலுக்கு தீங்கு செய்யிற எதையும் நாங்கள் தட்டிக் கேட்கலாம் தானே” மகன் பாட்டிக்கு உதவிக்கு வருகிறான்.

“சரி நீரால், காற்றால், புகையால் எல்லாம் சூழல் மாசடையுது சத்தத் தால் எப்படி மாசடையும்?”

இது நாலாம் வகுப்பு படிக்கும் சின்ன மகள்.

“மனிதனின் உடல் நலத்திற்கு தீங்கு தாற விடயங்கள் சூழலில் இடம்பெற்றால் அது சுழலை மாசடையச் செய்தலுக்குள் அடங்கும்”

“சரி சத்தத்தால் என்ன தீங்கு வரும் ?”

“ஏய் இப்ப பாட்டிக்கு தலையிடி என்னெண்டு வந்தது? தலையிடி மட்டுமல்ல காதுக் கோளாறுகள், ஓய்வெடுக்க முடியாமை, பதட்டமான மனநிலை எல்லாம் வரும் தெரியுமோ”

மகனின் விளக்கத்தை ஆமோதிப்பது போல மகள் தலையை ஆட்டிக் கொண்டிருந்தாள்.

சரி தான் குருக்களோட ஒருக்கா கதைச்சுப் பார்ப்போம்.

கோயில் வளவுக்குள் நுழைகிறேன். தூய்மையும் அழகும் பளிச்சென்று தெரிகிறது. ஆங்காங்கே நந்தியாவட்டைச் செடிகளில் கொத்துக் கொத்தாக வெள்ளைப் பூக்கள் அழகிற்கு அழகு சேர்க்கிறது. இந்த இடம் மட்டும் அமைதியாக இருந்தால் சுவர்க்க லோகமாகத் தான் இருக்கும்.

காளியம்மன் கம்பீரமாக வீற்றிருக்கிறாள். தனிமையில் அவளுக்குத் துணையாக ஒலிபெருக்கி மட்டும் பாம்பை துணைக்கு அழைத்துக் கொண்டிருக்கிறது. அண்ணாந்து பார்க்கிறேன். வேப்பமரத்தில் இரண்டு ஒலி பெருக்கிகள் கட்டப் பட்டிருக்கின்றன.

“எங்கே குருக்கள் ஐயாவைக் காணோம்”

அதோ கூட்டி முடிந்த கொண்டையும், காவி வேட்டியும், தட்டு நிறையப் பூவுமாக, தொந்தி சரிய வந்து கொண்டிருக்கிறார். என் அருகில் வந்தவுடன் அவர் பார்வை கொக்கி போட்டு நிற்கிறது.

"என்ன தம்பி?"

"ஐயா வணக்கம் நான் கொஞ்சம் தள்ளி குடியிருக்கிறன்"

"புதுசா வந்தனீங்களோ?"

"ஓமோம் மணி அண்ணன்ர வீடு அங்க தான் இருக்கிறம்"

"சொல்லுங்கோ ஏதும் அலுவலோ"

"ஐயா குறை நினைக்காதேங்கோ ஒரு சின்ன விண்ணப்பம், வீட்டில வருத்தக்காறர் படிக்கிற பிள்ளையள் இருக்கினம் நீங்கள் இந்த ஸ்பீக்கரை கொஞ்சம் குறைச்சுப் போட்டிங்களெண்டால்....."

குருக்களின் முகம் சட்டென்று மாறிப் போகிறது.

"தம்பி உது சரிவராது. அம்மாவின்ர அருள் எல்லோருக்கும் கிடைக்க வேணும். இதால எவ்வளவு சனம் பயன் பெறுகினம் தெரியுமோ? பக்கத்தில மட்டுமில்லை தூரத்தில இருக்கிற சனம் கூட வீட்டில இருந்தே பலனை அனுபவிக்குது. ஒரு நாள் போடாட்டாலும் 'என்ன ஐயா இண்டைக்கு ஊரில் இல்லையோ' எண்டு கேக்குதுகள். அதுகளுக்காகத் தான் நான் இல்லாட்டாலும் இந்தப் பாட்டுகளைப் போட ஒழுங்கு செய்திருக்கிறன்."

ஓகோ ஐயா தனது இருப்பை உணர்த்தத் தான் பாட்டுப் போடுகிறார் போல

"ஐயா தூரத்தில இருக்கிற சனத்துக்கு கேக்க நல்லாத்தான் இருக்கும். ஸ்பீக்கரை உயரத்தில கட்டியிருக்கிற படியால் உங்களுக்கும் பெரிசா பாதிப்பு இல்லை. இதால கஸ்ரப்படுகிறது பக்கத்தில இருக்கிற நாங்கள் தான்."

குருக்களின் குரலில் பதட்டம் தொற்றிக் கொள்கிறது.

“தம்பி இப்பிடித்தான் முந்தி ஒரு மனிசி... மகள் படிக்க வேணும் பாட்டுப் போடாதேங்கோ எண்டு என்னோட சண்டை பிடிச்சவ. கடைசியில எல்லாம் களவு குடுத்திட்டு இடத்தை விட்டே போனவ. போகேக்க என்னட்ட மன்னிப்புக் கேட்டவ. இது கோயில் விசயம் தம்பி கவனமாக இருக்க வேணும்”

இது என்ன இந்த கிழவன் சம்மந்தமில்லாமல் கதைச்சுக் கொண்டு நிக்குது. நானும் கொஞ்சம் முறால் எடுக்கத்தான் வேணும்.

“என்ன ஐயா கனக்க கதைக்கிறியள், மனதை அமைதிப் படுத்தத் தான் கோயில் இப்படி ரென்சனாக்கிறதுக்கு இல்லை”

என் குரலின் சூடு அவரைச் சுட்டிருக்க வேண்டும்.

“சரி காலையில் கொஞ்சம் குறைச்சுப் போடுறன். ஆனால் செவ்வாய் வெள்ளி விசேட நாட்களில் குறைக்ககேலாது”

“இந்த அயலுக்க சைவக்காரர் மட்டுமில்லை. எல்லா சமயத்து ஆக்களும் இருக்கினம். அவையும் சீறிச் சினக்காத மாதிரி பாட்டப் போட்டீங்க எண்டால் எல்லோருக்கும் நல்லது.”

சொல்லி விட்டு வந்து விட்டேன். இரண்டு நாட்கள் காலை வேளையில் சத்தம் கொஞ்சம் குறைவாக இருந்தது. மூன்றாம் நாள் செவிப்பறை கிழிந்தது.

அம்மா சொன்னா ‘புரட்டாசிச் சனி விரதம்’ என்று.

அதைத் தொடர்ந்து ‘நவராத்திரி விழா’ - முடிந்தது.

மீண்டும் ஒலி. அம்மா சொன்னாள் ‘கௌரி விரதம்’ என்று.

இருபத்தி ஒரு நாளும் இதயம் வெடிக்க வெடிக்க எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். எப்போது முடியும் என்று, இன்று கடைசி நாள். இன்றைக்கு மட்டும் தானே வலுக்கட்டாயமாக கண்களை மூடிக் கொள்கிறேன்.

திடுதிப்பென்று கதவுகளைத் தள்ளிக் கொண்டு என் மகன். கண்களைத் திறக்கிறேன். தன் கையில் இருந்த புத்தகத்தை

தொப்பென்று என் அருகில் போட்டு விட்டு அதே வேகத்தில் என் அருகில் படுத்துக் கொள்கிறான். வேகமாக மூச்சு வாங்குகிறது இந்த முறை பரீட்சை எடுப்பவன்.

"என்ன மகன் படிக்கேல்லையோ"

அவன் மௌனமாக படுத்திருக்கிறான்.

'இந்த சத்தத்துக்குள்ள படிக்கேலுமோ' அவன் மனதுக்குள் பேசுவது எனக்கும் கேட்கிறது.

"பகலிலையும் வீட்டில இருந்து படிக்கேலாது. நான் லைபிறறிக்குப் போய் படிக்கப் போறன்."

நான் மௌனமாக இருக்கிறேன். என்ன தீர்வு?

அம்மா பலமாக இருமுகிறாள்.

"மகன் பாட்டி கூப்பிடுற மாதிரி கிடக்குது" படுக்கையில் இருந்து துள்ளி எழும்புகிறேன். என் மனைவி வாரிச் சுருட்டிக் கொண்டு எனக்கு முன்னால் ஓடுகிறாள்.

"அம்மா என்னம்மா?"

அம்மா சக்தியெல்லாம் திரட்டி இருமலையே பதிலாக்குகிறாள். என் மனைவி அவவின் முதுகை வருடி விடுகிறாள்

"நான் கன நேரமா கூப்பிடுகிறன் பிள்ளை"

"எங்களுக்கு கேட்கேல்ல மாமி"

"அப்பாவுக்கு காய்ச்சல் காயுது மகன். அது தான் கூப்பிட்டனான்." அப்பாவைத் தொட்டுப் பார்க்கிறேன். அனலாகக் கொதிக்கிறது.

"சீ இந்த சத்தத்தால கூப்பிடுறது கூட கேக்குதில்லை. இண்டையோட கௌரிவிரதம் முடியுது தானே அம்மா?"

அம்மா என்னைப் பார்க்கிறாள். அவள் பார்வை என் அறியாமையைச் சாடுகிறது.

"இனி கந்த சஸ்டி விரதம் தொடங்குது மகன்"

நான் விறைத்துப் போகிறேன். இதுவரை காலமும் விரதங்கள், பூசைகள் என்று சம்மந்தமே இல்லாமல் இருந்த எனக்கு இப்போது ஒவ்வொரு மாதமும் இன்னது நடக்கும் என்று கற்பிக்கப் படுகிறது.

"கந்த சஸ்டி முடிய திருவெம்பாவை, பிறகு விநாயகர் சஸ்டி இருபத்தொரு நாள் நடக்கும்...." என் மனைவி அடுக்கிக் கொண்டே போகிறாள்.

அம்மா சொல்கிறாள் "மகன் வேற வீடு பார்ப்பம்"

வேறு வீடு பார்க்கலாம் தான், ஆனால் அந்த குருக்கள் சொல்லுவார் இப்பிடித்தான் முந்தி ஒரு மனிசன் பாட்டைக் குறைக்கச் சொல்லி நிண்டவர். பிறகு அவையள் வீட்டில வருத்தம் துன்பம் எண்டு இடத்தை விட்டே ஓடிப் போட்டினம், போகேக்க என்னட்ட மன்னிப்பு .....

சீ கூடாது ....என்ன செய்யலாம்...யோசிக்கிறேன்.

"அப்பா பொலிசில அறிவிப்பம். எங்களுக்கு சட்டம் இருக்குது" என் இளங்கன்று மகன் துள்ளுகிறான்.

"வேண்டாம் கோயிலோட முண்டாதேங்கோடா நாங்கள் விலத்தி இருப்பம்" அம்மா பதட்டமாகிறாள்.

"நாங்கள் என்ன கோயிலோடேயோ கோபம். உந்த ஸ்பீக்கரோட தானே" மகன் பாட்டியோடு மல்லுக் கட்டுகிறான்.

"இவ்வளவு சனமும் பொறுத்துக் கொண்டு தானே இருக்குதுகள்."

"அதுகள் காளி அம்மனுக்கு பயத்தில இருக்குதுகள். அம்மன் என்ன பொல்லாதவளா? எங்களுக்கு ஏலாமல் கிடக்கு எண்டு

அவவுக்குத் தெரியும். அப்பா இண்டைக்கு கட்டாயம் பொலிசில அறிவிக்க வேணும்"

என் அம்மா என்னைப் பார்க்கிறாள். அவள் பார்வையில் என் மகன் வென்று விடுவானோ என்ற அச்சம் அப்பட்டமாகத் தெரிகிறது. அவள் கைகள் குவிகின்றன.

"உங்களைக் கையெடுத்துக் கும்பிடுறன், பொலிசுக்குப் போக வேண்டாம், வேற வீடு பாருங்கோ"

என் அப்பா "ஸ்பீக்கர் உள்ள கோயிலுக்கருகில் குடியிருக்காதே" என்று பெருமூச்சோடு சொல்கிறார்.

ஓ...அவரும் அம்மாவின் கருத்தை ஆமோதிக்கிறார்.

* * *



# 6 பயணம்

“கவனமா போயிற்று வாங்கோப்பா. பின்னேரம் மட்டும் நிற்க வேண்டாம்”

“சரி”

“வரேக்க தெரிஞ்சவை யாரையாவது ஏத்திக் கொண்டு வாங்கோ”

“சரி”

“தெரியாத ஆட்கள் ஆரும் மறிச்சால் நிப்பாட்ட வேண்டாம் சரியா”

“சரியப்பா சரி”

மனைவியின் தினசரி வாய்பாட்டுப் பட்டியல் நீண்டு கொண்டு சொல்வதற்கிடையில் தவராசா மாஸ்ரர் மோட்டார் சைக்கிளை “ஸ்ராட்” செய்து விட்டார்.

வண்டி நகரத் தொடங்கியதும் மனைவியின் குறுகுறுத்த பார்வை அவரது முதுகைத்

துளைப்பதாக உணர்வு. திரும்பி அவளைப் பார்த்து புன்னகை ஒன்றைச் சிந்தினார்.

வவுனியா நகரில் இருந்து செட்டிகுளம் நோக்கிய அவரது பயணம் ஆரம்பமாகி விட்டது.

வவுனியா மன்னார் பிரதான வீதியில் அவரது மோட்டார் வண்டி வேகம் பிடித்துக் கொண்டது. அவரைப் போன்ற தொழில் புரிவோர்க்கு எல்லாம் இந்தப் பாதைதான் இப்போது பயன்பாட்டில் உள்ளது.

வீதியின் இருமருங்கிலும் இராணுவத்தினரின் காவலரண்கள் அணி வகுத்து நிற்கின்றன. காலை வேளையில் அனேகமானவர்கள் பல் துலக்கிக்கொண்டோ, குளித்துக் கொண்டோ, கையில் வாளியுடனோ காணப்படுவர்.

பெரும்பாலும் அக்கம் பக்கம் பார்வையைச் செலுத்துவதைத் தவிர்த்துக் கொண்டு இராஜ கம்பீரமாக நேரான பார்வையில் அவர் வண்டியைச் செலுத்தப் பழகியிருந்தார்.

பூவரசங்குளம் சந்தியை நெருங்கிய போது மோட்டார் சைக்கிள் 'ரயர்கள்' சப்பளிந்து நின்று விட்டன.

"என்னடா கஸ்ரகாலம்" தனக்குள் முணுமுணுத்துக் கொண்டு வண்டியை தள்ளிச் சென்று அருகில் இருந்த சைக்கிள் கடையில் 'ரயர்களை' ஒட்டிக் கொண்டு நிமிர்ந்த போது அரை மணித்தியாலம் நாசமாகி விட்டிருந்தது.

பூவரசம் குளம் பாடசாலையை அண்மித்த போது கவனித்தார். பாடசாலையில் பாடங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அவரது கைக்கடிகாரத்தின் முட்கள் மணி எட்டைத் தொடுவதற்கு ஓடிக் கொண்டிருந்தன.

'இண்டைக்கு ஆகப் பிந்திப் போட்டுது. என்ர வகுப்புப் பிள்ளைகள் இப்ப தலை கீழாய்த் தான் நிக்குங்கள்.' எண்ணும் போதே வண்டி வேகம் பிடிக்கத் தொடங்கியது.

பூவரசங்குளம் சந்தியால் திரும்பிய போது அருகிலிருந்த வைத்திய சாலையின் மருந்து மணம் நாசிக்குள் புகுந்து குடைந்தது. குண்டும் குழியுமான வீதியில் விழுந்து எழும்பி வண்டி ஓடியபோது 'கடவுளே பழையபடி காற்றுப் போய்விடக் கூடாதே' என்று மனம் பயந்து கொண்டிருந்தது.

வீதியின் அமைதியும் தனிமையும் அவரது மனதில் ஏதேதோ எண்ணங்களைக் கொண்டுவந்து கொண்டிருந்தது. மனதில் இலேசான பயம் தலை தூக்கியது.

பயம் பயம் எல்லாவற்றிற்கும் பயம், நடக்கப்பயம், இருக்கப் பயம், படுக்கப்பயம், தெனாலி படத்தில் கமலகாசனின் பயம் நினைவுக்கு வந்தது. இந்தப் பயம் என்பது இருக்க வேண்டியது தான். வாழ்க்கையே பயமாகிப் போனால்...

அவரது வண்டியைப் போலவே மனமும் அமைதியில்லாமல் மேடு பள்ளங்களில் செல்லத் தொடங்கியது. கண்கள் சுற்று முற்றும் சுழன்று நோக்கின. கண்ணாடி வழியாக தன்னை யாரும் பின் தொடர்கிறார்களா என்று அடிக்கடி பார்த்துக் கொண்டார்.

'சீ என்ன பிழைப்பு இது நெடுகலும் இப்பிடி பயந்து சாகேலுமோ, கெதியில வேற பள்ளிக்கூடம் மாற வேணும்' மனம் அங்கலாய்த்தது.

வவுனியா நகரில் இருந்து செட்டிகுளம் வருவதென்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. கிட்டத்தட்ட 26 கிலோ மீற்றர்கள் தாண்டி வர வேண்டும். இந்த தூரம் காரணமாகவே ஆசிரியர்கள் அங்கு செல்வதற்கு பின்னடிக்கிறார்கள். தவராசா மாஸ்ரருக்கும் இந்தக் கவலை தொற்றிக் கொண்டது.

'நானும் போக வெளிக்கிட்டால் கணக்குப் பாடத்துக்கு இனி எப்ப ஆள் வரப் போகுதோ தெரியாது' ஆழமான பெருமூச்சு அவரை அறியாமலே வெளியேறியது.

பாதையின் இரு மருங்கிலும் வளர்ந்திருந்த பற்றைக் காடு அச்சத்தை கொடுத்தது. இடையிடையே காணப்பட்ட இலத்திக்

குவியல்கள் யானைகள் இரவிரவாக கும்மாளம் அடித்துச் சென்றிருப்பதை உணர்த்தியது.

முன்பெல்லாம் இந்த பூவரசங்குளம் பாதையை யாரும் பெரிதாக பாவிக்க மாட்டார்கள். அடர்ந்த காடு ஒருபுறம், யானைப் பயம் ஒருபுறம், கள்வர் பயம் என்று ஏகப்பட்ட பயங்கள். நெளுக்குளம் ஊடான சுற்றுப் பாதையைத் தான் பாவிப்பார்கள்.

இராசேந்திரன் குளம், சூடுவெந்தபுலவு, ஒலுக்குளம், வீரபுரம், ,நேரிய குளம் என்று எத்தனையோ குளங்களைத் தாண்டி செட்டிகுளம் சென்றடைய ஆகக் குறைந்தது ஒன்றரை மணித்தியாலமாவது வேண்டும்.

நாட்டு நிலமை மோசமாக மோசமாக சோதனைச் சாவடிகளும் பெருகப் பெருக பயண நேரமும் பெருகியது. கூடவே வவுனியாவில் இடம் பெறும் அசம்பாவிதங்களின் எதிரொலிகளால் சிங்களக் கிராமமாகிய ஒலுக்குளத்தைத் தாண்டிச் செல்ல மனம் துணியவில்லை. விளைவு காட்டுப் பாதையான பூவரசங்குளப் பாதை கலகலப்பாகியது.

மோட்டார் சைக்கிள் கிடங்கில் இறங்கிக் குதித்தது. தவராசாவின் மனதில் சிந்தனை நரம்புகள் அறுந்தன.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் அவ்வீதியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக வீசப்பட்டிருந்த சடலங்கள் கண் முன்னால் நின்று பயமுறுத்தின. வெட்டுப்பட்டு, முகம் எரிக்கப்பட்டு... காலை வேளையில் பாடசாலைக்கு செல்லும் வழியில் பார்த்துவிட்டு மனித உயிரின் பெறுமதியை எண்ணி மனம் கனத்துச் சென்ற அந்த நாள் இன்றுவரை கனத்துக் கொண்டிருக்கின்றது. இந்த இடத்தைத் தாண்டும் போது பயம் ‘கப்’பென்று வந்து பற்றிப் பிடித்துக் கொள்கின்றது.

தவராசாவின் கண்கள் இரு மருங்கையும் நோட்டமிட்டபடி செல்கின்றன. ஏதோ பனம் பழம் விழுந்து கிடப்பது போல் யாராவது கிடப்பார்கள். பிறகு ஏனையோர் வந்து பொறுக்கி எடுத்துச் செல்வார்கள் என்பது போல ஒரு எண்ணம்.

மனம் எதை எதையெல்லாமோ எதிர் பார்க்கத் தொடங்கி விட்டது. தூரத்தில் பேருந்து ஒன்று புழுதியை இறைத்துக் கொண்டு வருகிறது.

தவராசா மாஸ்ரர் தலைக் கவசத்தின் கண்ணாடியை இறக்கி விட்டுக் கொண்டு ஓரமாக ஒதுங்கிக் கொள்கிறார்.

வீதியில் திருத்த வேலைக்காக பக்கங்களில் குவிக்கப்பட்டுள்ள மண், கல், குவியல்களிடையே அந்த பேரூந்து லாவகமாக வளைந்து, நெளிந்து பயணிகளை அப்படியும் இப்படியும் ஆட்டி அலைக்களித்துக் கொண்டு வருகிறது. அது அருகில் வரும் போது கேட்ட 'கடமுடா' சத்தம் அவருக்கு சலிப்பை ஏற்படுத்தியது.

"ஒரு ஒழுங்கான பஸ் கூட விடமாட்டாங்கள்" அங்கலாய்த்துக் கொண்டார்.

கைக்கடிகாரத்தைப் பார்த்து திகைத்து விட்டு வேகத்தைக் கூட்டினார். இன்னும் பத்து நிமிசத்தில் போய்விடலாம்.

ஆங்காங்கே புதிதாக முளைத்திருந்த வீடுகள் பயப் பிராந்தியை கலைக்கத் தொடங்கின.

'அப்பாடா இனிப் பயம் இல்லை' பெரிதாக ஒரு நிம்மதிப் பெருமூச்சு எழுந்து அடங்கியது.

எதிரே கையில் கனமான பொருளுடன் யாரோ ஒருவர் வீதிக்கரையில் இருந்து எழுந்து வீதிக்கு வருகிறார்.

தவராசாவின் இதயம் திடீர் என்று இரத்த ஓட்டத்தை அதிகம் பெற்று தாறுமாறாக துடிக்கத் தொடங்கியது. அப்படியே மோட்டார் சைக்கிளை திருப்பி வந்த வழியே ஓடுவதற்கு மனம் எத்தனித்தது. வேகத்தை குறைத்து நிதானித்துப் பார்த்தார்.

'நாதன் மாஸ்ரர் போல கிடக்குது,ஓமோம் அவர் தான்' போன உயிர் திரும்பியது.நாதன் மாஸ்ரர் கைகளை காட்டிய போது பெரிதாக சிரித்துக் கொண்டு வண்டியை நிறுத்தினார்.

"நான் பயந்து போனன் மாஸ்ரர்"

"ஏன் அண்டைக்கு மாதிரி யாரோ மறிக்கிறாங்கள் எண்டோ"

"ஓமோம் அப்படியெண்டால் நான் திரும்பி ஓடத்தான் பார்த்தனான்"

"எங்க ஓடித்தான் என்ன பயன். வவுனியா மாவட்டம் என்ன லண்டன் மாதிரியா? நினைச்சா கோழிக் குஞ்சை அமுக்கின மாதிரி பிடிச்சுப் போடுவாங்கள்" ....நாதன் மாஸ்ரர் பேசிக் கொண்டே வந்தார்.

தவராசா மாஸ்ரருக்கு சென்றவாரம் நடந்த நிகழ்வு உள்ளே ஓடிக் கொண்டிருந்தது.

மறித்தவர்கள் யாரென்று தெரியவில்லை. கையில் ஆயுதம். ஊர், பேர், தொழில் எல்லாம் விசாரித்தார்கள்.

"ஓ...நீர் தானே அந்த தவராசா?"

தவராசா மாஸ்ரர் புரியாமல் விழித்தார். "இந்த பேப்பருக்கெல்லாம் எழுதிறவர் நீர் தானே?"

அடிவயிற்றில் சிலீர் என்று பயம் ஓடியது. மாஸ்ரர் அப்படியும் இப்படியும் தலையை ஆட்டினார். அது ஆமோதிக்கின்றாரா? இல்லையா என்று புரியாத தலையசைப்பாக இருந்தது.

இப்போது நினைத்தாலும் படபடக்கத் தொடங்கும். ஏன் இதைக் கேட்டார்கள். நான் எழுதுவது சரியென்றா? அல்லது எழுதக் கூடாது என்றா? என் எழுத்துக்கள் யாரைப் பாதித்தன. நீர் தானோ! என்று குறிப்பிட்டுக் கேட்கும் அளவுக்கு நான் முக்கியமானவனாகி விட்டேனா? அழுவதற்கும் சிரிப்பதற்கும் எனக்கு உரிமை இல்லையா? என் பேனா உண்மைக்குப் புறம்பாக பொய்மையைக் கக்க வேண்டும் என்று இவர்கள் விரும்புகிறார்களா? ஆயிரம் கேள்விகள் மண்டையைக் குடைந்தன.

"டமார்" வண்டி பள்ளத்தில் இறங்கிய போது பின்னால் இருந்த நாதன் மாஸ்ரர் அவரை இறுகப் பற்றிக் கொண்டார்.

"என்ன யோசனை போல கிடக்குது"

"ஓமோம் எல்லாத்தையும் யோசிச்சனான்"

“அண்டைக்குப் பிறகு ஒண்டும் எழுதேல்லையோ”

“அதைப் பற்றியும் எழுதினனான். பேப்பருக்கு மட்டும் போடேல்ல”

தவராசா மாஸ்ரர் மௌனமானார். எழுத்து, பேச்சு ஏன் மூச்சுச் சுதந்திரம் கூட இங்கு இல்லை. எத்தனை காலத்துக்குத் தான் இதைச் சகிப்பது?. நியாயங்கள் செத்துவிட்ட இந்த நாட்டில் உண்மை பேசும் நாவிற்கு உத்தரவாதமில்லை.

கங்கன் குள சந்தியில் சனக்கூட்டம். தன்னிச்சையாக மோட்டார் சைக்கிள் நின்றது.

“என்ன எதுவும் பிரச்சனையோ”

“நேற்றுப் பின்னேரம் ஊர்ப் பெடியன் ஒருவனை சுட்டுப் போட்டாங்கள்.”

“ஏன்?”

“ஆருக்குத் தெரியும்”

ஓ…என்று தொண்டை வெடிக்கும் வரைக்கும் அலற வேண்டும் போன்ற தவிப்பு.

“போன வருசம் எங்கட பள்ளிக்கூடத்தில படிச்ச பெடியனாம்.”

நாதன் மாஸ்ரர் விசாரித்து தகவல் கூறினார்.
“என்னால தாங்க ஏலாமல் கிடக்குது நாதன்”

தவராசாவின் குரல் உடைந்து தளதளக்கின்றது. கண்களில் நீர் துளிர்த்தது.

பாடசாலையை அண்மித்த நேரம் அனைவரது பார்வையிலும் திகில் நிறைந்திருந்தது. சோகம் அப்பியிருந்தது.

ஏன் மாஸ்ர் இண்டைக்கு வந்தனீங்கள்?

"வராமல் எங்க போறது?"

"சம்பளம் வராட்டிலும் பரவாயில்லை லீவில நில்லுங்கோ"

'என் குடும்பத்தை யார் பராமரிப்பதாம்' மனதுக்குள் கேட்டுக் கொண்டாலும் மௌனமாக தலையசைத்துக் கொண்டார்.

"குடும்பத்தோட எங்கயாவது போங்க மாஸ்ரர்"

ஆளாளுக்கு ஆலோசனைகளை அள்ளி வழங்கிக் கொண்டிருந்தார்கள். எங்கே போவது? யாரிடம் போவது? பணத்திற்கு என்ன செய்வது? இதெல்லாம் உடனடியாக சாத்தியமான விடயங்களா?

தவராசா மாஸ்ரரின் முகம் இறுகிப் போய்க் கிடந்தது. விரக்தியின் சாயல் முகத்தில் அப்பியிருந்தது. தலைக்கு மேல் வெள்ளம் ஏறியவனின் நிலையில் அவர் இருந்தார்.

'வாழ வேண்டிய வயதில் குருத்துகள் எல்லாம் கருகிப் போகின்றன. ஐம்பது வயதைத் தாண்டிய நான் எங்கே ஓடி ஒழிவது? எங்கே போனாலும் இதே நிலை தான்'

எண்ணங்கள் அலை போலப் புரண்டு புரண்டு அவரை வியாபித்துக் கொண்டன. அவர் உள்மனது மட்டும் ஏதோ ஒரு அமைதியின் ஆழத்திற்கு அவரை இழுத்துச் சென்று கொண்டிருந்தது.

எல்லோரும் ஆலோசனைகளை வழங்கினார்கள். ஆனால் அவரது தினசரிப் பயணம் இனியும் தொடரத்தான் போகின்றது என்பது யாருக்குமே புரியவில்லை.

* * *



# 7 போலிகள்

சூசைப்பிள்ளைக் கிழவன் செத்துப் போனாராம். எதிர் பார்த்தது தான். இரண்டு வாரங்களாக கிழவன் இந்தா அந்தா என்று தான் இருந்தார். சவிரிமுத்து சுவாமி வந்து அவஸ்தை கூட கொடுத்து விட்டுச் சென்றார். ஏதோ கிழவனின் நல்ல காலமோ இல்லை அவரை பாராமரித்த பிள்ளைகளின் நல்ல காலமோ தெரியவில்லை கிழவன் இறுதியில் செத்துப்போனது.

சும்மா சொல்லக்கூடாது இரும்புக் கம்பி மாதிரி மனிசன். உழைத்து உழைத்து முறுக்கேறிப் போயிருந்த உடல்; இலகுவில் வளைந்து கொடுக்காமல் நோய்க்கு ஈடு கொடுத்தது. அல்லாவிட்டால் கடைசிப்பலம் இருக்கும் வரை மண்வெட்டியும் கையுமாக மனிசனால் நடமாடியிருக்க முடியுமா?

அந்த நாளில் ஆள் நல்ல வாட்ட சாட்டமாய் இருந்திருப்பார். சாதி மாறி சமயம் மாறி அவரை நம்பி ஒரு சிவத்த பொம்பிளை கழுத்தை நீட்டியதில் இருந்து தெரிந்திருக்க வேண்டும் அவரின் கம்பீரம்.

மனைவி வேலாச்சி பக்கத்து ஊர் விதானையாரின் மகள். செல்வாக்கான குடும்பம். சூசைப்பிள்ளையின் நெடு நெடுத்த உருவமும், அழகும் அவளைக் கட்டிப்போட்டு விட்டது. கூட்டிக் கொண்டு வந்து விட்டார். அந்த வேளையில் ஒற்றை ஆளாக நின்று சண்டித்தனம் செய்த அவரின் வீரப் பிரதாபங்களை ஊர் இப்போதும் கூட பேசிக்கொள்ளும்.

மரண வீடு களைகட்டத் தொடங்கி விட்டது. இடையிடையே பெண்களின் ஒப்பாரி உரத்து ஒலித்தது. யாராவது நெருங்கிய சொந்த பந்தங்கள் வரும் போது இரு மடங்காகியது. உறவுகள் எல்லாம் கேள்விப்பட்டு வந்து கொண்டிருந்தனர். பிள்ளைகள் பல திசைகளிலும் இருந்து பறந்து வந்து கொண்டிருந்தனர்.

“அப்பா உங்களைப் பார்க்க குடுத்து வைக்கேல்லையே இந்த நிலமையிலா உங்களைப் பார்க்க வேணும்”

மூத்த மகள் ரஞ்சிதம் விழுந்து புலம்பிக் கொண்டிருந்தாள். ஏன் இரண்டு வாரமாக கிழவன் படுக்கையில் தானே கிடந்தார். வந்து பார்த்திருக்கலாம் தானே. பாவம் கிழவன் ஏழு பிள்ளைகளைப் பெற்றும், கடைசியில் ஆதரவாக தூக்கி நிறுத்த ஆளில்லாமல் தான் இறந்து போனார்.

மூத்த மகள் ரஞ்சிதம், இரண்டாவது மகள் மலர், அடுத்தவன் குமார், மூவருக்கும் வெளியூரில் மணமக்களைத் தேடி எடுத்தார்.

அவர்களுக்கு பின்னர் பிறந்த ஆண் பிள்ளைகள் இருவரும் கனடாவிற்குப் போய் அங்கே குடியும் குடித்தனமும் ஆகி விட்டார்கள். ஏதோ மாதம் ஒரு முறை தொலை பேசியில் கூப்பிட்டு கதைப்பார்கள். திடீரென்று ஞாபகம் வந்து ஒரு இரண்டாயிரம் மூவாயிரம் ரூபா அனுப்புவார்கள்.

ஊருக்குள் சொந்தத்துக்குள்ளேயே கடைசி மகளையும்,மகனையும் கட்டிக் கொடுத்தார். கடைசிக் காலத்தில் தனக்குப் பக்கத்திலேயே இருப்பார்கள் என்ற நம்பிக்கையில், ஆனால் அவர் படுக்கையில் விழுந்தபோது இரண்டு மூன்று நாட்கள் போட்டி போட்டுக் கொண்டு பராமரித்தவர்கள், கிழவன் படுக்கையிலேயே

கழியத் தொடங்கியதும் கொஞ்சம் விலகிக் கொண்டனர். மனைவி வேலாச்சிதான் கடைசி வரையும் அவரது அழுக்குகளைக் கழுவினாள். கிழவியின் இயலாமையை பார்த்து மனிசன் இழுபடாமல் போனது நல்லது தான் என பார்ப்பவர்கள் நினைத்துக் கொண்டது உண்மைதான்.

சூசைப்பிள்ளைக் கிழவன் முற்றத்தில் நடு நாயகமாக கிடத்தப்பட்டிருந்தார். கையில் அவரது கனத்த கறுத்த மணியிலான செபமாலை செருகப் பட்டிருந்தது. ஒவ்வொரு நாள் இரவிலும் சாய்மனைக் கதிரைக்குள் இருக்கும் அவரது கைகளில் இந்த மாலை மணிகள் உருண்டு கொண்டிருக்கும். சாகும் வரை சிறுவயதுப் பழக்கத்தை அவர் கைவிடவே இல்லை.

சுற்றிவர அமர்ந்திருந்தவர்களின் அழுகை ஏறக்குறைய நின்று போயிருந்தது. சிலர் சுவாரசியமாக பேசிக் கொண்டிருந்தனர். வேலாச்சி கூட அவிழ்ந்திருந்த கூந்தலை அள்ளிச் செருகி விட்டு வெற்றிலை போடத் தொடங்கியிருந்தாள். வேலாச்சியால் வெற்றிலையை மட்டும் மறக்கவே முடியாது. கணவனும் மனைவியும் இந்த வெற்றிலை விடயத்தில் கண்டிப்பும் கறாருமாக தனித்தனிப் பொட்டலங்களை வைத்திருப்பர்.

பிரேதத்தை கிடத்தி விட்டு ஊர்க் கதைகளைப் பேசுவது என்னவோ போல் இருந்தது.

“யாராவது செபமாலை சொல்லுங்கோவன்” பெண்களிடம் நெருங்கி வந்து ஒருவர் கேட்டுவிட்டுச் சென்றார். செபமாலை தொடங்கியது. தண்டவாளத்தில் ஓடும் ரயில் கணக்காக தடம் புரளாமல் வேகமாகச் சென்றது. வெளியே வரிசையாகப் போடப்பட்டிருந்த கதிரைகளில் தமக்கு இதில் சம்மந்தமே இல்லை என்பது போல ஆண்கள் புதினங்களைக் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

இரவு நெருங்கியது. பெரும்பாலும் அனைவரும் இயல்பு நிலைக்கு வந்து விட்டனர். ஆங்காங்கே ஒரு சிலர் சுருண்டு படுத்துக் கொண்டனர். பெரும்பாலான பெண்கள், குழந்தைகளின் கழுத்தில் செபமாலை அணிந்திருந்தனர். பக்தியிலா? பயம்.... பாதுகாப்பு கவசம், செத்த மனிதன் ஆவியாகி பிடித்து விடுவான் என்ற பயம். ஆண்கள் விடிய விடிய பிரேதத்திற்கு காவல் காப்பதாக விழித்திருந்து சீட்டாட்டம்

விளையாடினர். வெற்றிலையும் சுருட்டும் பீடியும் அவர்களுக்கு துணையாகின.

கிழவனின் தலைமாட்டில் வைக்கப்பட்டிருந்த குத்து விளக்கு சில வேளைகளில் தானும் உறங்க எத்தனித்தது.

விடிந்தது. நேற்று முழுவதும் தனது வெளிநாட்டுப் பிள்ளைகளின் வரவுக்காக காத்திருந்த கிழவனின் உடலில் இலேசாக மாற்றம் தெரிந்தது. பத்து வருடங்களாக காத்திருந்து காத்திருந்து கலங்கிய மனிசன் பிணமான பின்பும் காத்திருந்தார். உடனடியாக அவர்களால் வர முடியவில்லையாம். ரெலிபோனுக்குள் மூக்கை உறிஞ்சி அழுதனர்

பதினொரு மணிக்குப் பிணத்தை எடுப்பது என முடிவாயிற்று. மகள் பிரேதப் பெட்டியைச் சுற்றி சென்ற் அடித்துக் கொண்டிருந்தாள்.

கிழவன் இறுதிப் பயணத்துக்கு தயாராகிவிட்டார். இறுதிச் செபம் தொடங்கியது. அந்தோனிப்பிள்ளை வாத்தியாரின் குரலில் செபம் கணீரென்று ஒலித்தது. மரண வீட்டில் வாத்தியாரை விட வேறு யாராலும் இவ்வளவு அழகாக செபம் படிக்க முடியாது. அவரது குரலுக்கு ஊரே அடங்கிப் போய் இருக்கும்.

செபம் முடியும் தறுவாயில் வாட்ட சாட்டமான ஆண்கள் சிலர் பெட்டியை நெருங்கிக் கொண்டனர். ஓட்டப் போட்டியில் ஓடுவதற்கு தயாராக நிற்பவர்களின் மனநிலையில், ஆயத்த நிலையில் நின்றனர். செபம் முடிந்தது பெட்டியை மூடலாம் என வாத்தியார் சைகை செய்தார்.

அவ்வளவுதான் கூக்குரல் உச்சஸ்தாயியில் ஒலிக்கத் தொடங்கியது.

“ஐயோ என்ர மாமாவை கொண்டு போகப் போறாங்கள்”

“ஐயோ என்ர அப்பாவை மூடாதேங்கோடா”

அவ்வளவு அசுரபலம் எங்கிருந்து வந்தது. இவ்வளவு நேரமும் தேடுவாரற்றுப் போயிருந்த கிழவனின் பெட்டியை மூடவிடாமல், பிள்ளைகள் உறவுகள் சூழ்ந்து கொண்டனர்.

பெட்டியைச் சுற்றி நின்ற ஆண்கள் இலேசானவர்களா? இதற்காகத் தானே தயாராக நின்றார்கள். அவர்கள் தமது முழுப் பலத்தையும் பிரயோகித்து ஒவ்வொருவராகப் பிரித்து இழுத்து, உதறித் தள்ளி அசுர பலத்துடன் பெட்டியை மூடினர்.

பெட்டியில் சரமாரியாக குத்தியடித்து அழுதனர். இழுபறியில் பெட்டியின் ஒருபக்கப் பலகை கழன்று வந்தது. பேரனைக் கட்டிப் பிடித்து அழுததில் அவன் கையில் இருந்த மலர் வளையம் திடீரென்று நேர் கோட்டில் நிமிர்ந்து நின்றது.

“அப்பாவை கொண்டு போகாதேங்கோ…”

சரி அவர்களின் ஆசைக்கு பெட்டியை இறக்கி இரண்டு நாளைக்கு அங்கு வைத்தால் என்ன?

அப்போது கொண்டு போங்கோ, கொண்டு போங்கோ என்று கதறியிருப்பார்களோ என்னமோ!

வேலி தாண்டி கிழவனின் பெட்டி தூக்கப்பட்டது. பட்டாசு படபடத்தது. உறவுகள் உன்மத்தம் பிடித்தவர்களாக பெட்டியின் பின்னால் ஓடினர். ஓடியவர்கள் படலையடியில் விழுந்து உருண்டனர். வீதிவரை ஓடிவந்த வேலாச்சியை யாரோ பிடித்து நிறுத்தினர்.

பெண்பிள்ளைகள், மனைவி எல்லோரும் எல்லை தாண்டாதவர்களாக நின்று கொண்டனர்.

கிழவனுக்காக ஒப்புக் கொடுக்கப்பட்ட கடைசித் திருப்பலியில் மீண்டும் பெட்டி திறக்கப் படுகின்றது. அந்தக் கணத்தில் தனது கடைசித் திருப்பலியில் கூட கலந்து கொள்ளாத தனது இரத்தங்களை வீட்டுப் படலையடியிலேயே தொலைத்து விட்ட நிம்மதி கிழவனின் முகத்தில் தெரிவது போல ஆழ்ந்த அமைதி.

திருப்பலி முடிந்து பெட்டி அமைதியாக மூடப்படுகிறது. சூசைப்பிள்ளைக்கிழவன் அமைதியாக நிதானமாக அலுக்காமல் குலுக்காமல் சேமக்காலையை நோக்கி பயணமாகிக் கொண்டிருந்தார்……

* * *



# 8 சண்டைவரப் போகுது

என் இனிய வானொலிப் பெட்டி நேற்றுத்தான் வாங்கியது. என் கடைக்குட்டி வாசு என் மார்பில் ஏறிக் கிடப்பது போல அது நெஞ்சில் படுத்துக் கிடக்கிறது. எத்தனை நாள் கனவு ஒரு நல்ல வானொலி வாங்க வேண்டும் என்று.

பாசறை நான் புகுந்த இடம்
பதுங்கு குழி உறங்குமிடம்
தேச நலன் எனது கடன்
தீந்தமிழே எனது திடன்
மண்ணை இன்னும் நேசிப்பவன் அதற்காய்
மரணத்தையே ஆசிப்பவன்......

தேனாய் மிதந்து வந்து இதயத்தைத் தொட்டுத் தழுவி நெருடிக் கொண்டிருக்கும் இனிய பாடல்... கண்களை மூடிக் கொண்டேன்.

குரல் குழைந்து குழைந்து எழுந்தது. மண்ணை இன்னும் நேசிப்பவன், அதற்காய் மரணத்தையே ஆசிப்பவன்....

என்னைப் போல ஏகாந்த வெளியில் சஞ்சாரம் செய்துகொண்டு, மரணத்தையே ஆசிக்காமல், உயிர்

காக்கும் வழியை யோசித்துக் கொண்டிருப்பவர்களுக்கு இது எப்படித்தான் பொருந்தும்?

மண்ணை இன்னும் நேசிப்பவன் எதற்கும் மரணத்தையும் யோசிப்பவன்..... எனக்கு நல்ல பொருத்தம் தான் நான்.....

"இஞ்சருங்கோ....."

மனைவியின் கிசுகிசுப்பான குரல் காதுகளில் பதட்டமாக ஒலிக்கிறது. கண்களைத் திறக்கிறேன். அவள் கைகள் வானொலியை நிறுத்துகின்றன.

"எத்தின தரமப்பா உங்களுக்கு சொல்லிறது. மெதுவாய் கேளுங்கோ எண்டு கேற்றடியில் பாருங்கோ ஆமிக்காறன் நிற்கிறான்"

"நான் மெதுவாய் தானேயப்பா கேட்டனான்..."

"மெதுவாயோ... உங்களுக்கு அங்கால இருக்கிற எண்ணம். எப்ப எல்லாரையும் அள்ளிக் கொண்டு போகப் போறானோ தெரியாது, எப்ப பார்த்தாலும் றேடியோவை கட்டிப் பிடிச்சுக் கொண்டு...."

"அப்ப நான் ஆரைக் கட்டிப் பிடிக்க...."

கேட்டுவிட்டு சிரிக்கிறேன்.அவளும் சிரிக்கிறாள்.

"இந்த கதையளுக்கு மட்டும் குறைச்சல் இல்ல"

"அப்ப எந்தக் கதையப்பா கதைக்கிறது?"

செல்லமணி முகத்தைச் சுழித்தக் கொண்டாள்.

"நாலாயிரம் ரூபா குடுத்து றேடியோ வாங்கத் தெரியும், நான் எத்தின நாளா கொஞ்ச கோழிக் குஞ்சு வாங்கித் தாங்கோ எண்டு கேட்கிறன். அது மட்டும் ஏலாது"

செல்ல மணி எனது பதிலைக் கேட்கக் கூடாது என்று உள்ளே போய் விட்டாள். அவளுக்குத் தெரியும் இதற்கு நான் என்ன பதில் வைத்திருக்கிறேன் என்று.

‘கொஞ்சம் பொறனப்பா பிரச்சினை வரப்போகுது என்று சொல்லியிருப்பேன்.

அவளுக்கு இந்தப் பதிலைக் கேட்டுக் கேட்டு காது புளிப்பேறிப் போய்விட்டது. என்றாலும் றேடியோவை வாங்கின இந்த ஒரு வாரத்திற்கும் அவளுடைய கோழிக் குஞ்சு நச்சரிப்பு கொஞ்சம் கூடித்தான் போய்விட்டது.

என்னுடைய ஆத்மாவின் ஏக்கத்திற்கும், கோழிக் குஞ்சுக்கும் எவ்வளவு தூரம்? என்னுடைய ஆத்ம தாகம் தான் என்ன?

எல்லா விதமான செய்திகளையும் கேட்க வேண்டும். நாட்டு நடப்புகளை ஒன்று விடாமல் துல்லியமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைப்பது ஒரு படித்த அரச உத்தியோகம் பார்க்கும் ஒருவரின் சராசரி ஆசைகளில் ஒன்று.

அந்த ஆசைகூட நிறைவேற விடாமல் எனது பழைய கரகரத்த றேடியோ அவ்வப்போது எனது கோபத்தைத் தூண்டும். அதன் முறிந்து போன அன்ரனாவுக்குப் பதிலாக செப்புக் கம்பியோ ஒரு துண்டு மின்சார வயரையோ இணைத்து உயரமான இடங்களில் தூக்கிப் பிடித்து, அலைந்து, அலைவரிசை பிடிப்பதற்கிடையில் போதும் போதும் என்றாகி விடும்.

அதனால் தான் இந்த மாதச் சம்பளத்தில் என்ன கஸ்ரம் என்றாலும் பரவாயில்லை என்று நாலாயிரம் ரூபாவை ‘சுளையாக கொடுத்து சிறிய வானொலிப் பெட்டி ஒன்றை வாங்கிக் கொண்டேன். காலை ஏழு மணிக்குத் தொடங்கும் எனது செய்தி கேட்கும் ஆசை இப்போது விடிய ஐந்து முப்பதுக்கே தொடங்கி விடுகிறது. காலை *IBC* தொடக்கம் இரவு *BBC* கேட்கும் வரை என்னோடு ஒட்டிக் கொண்டிருக்கும் வானொலிப் பெட்டியை பார்க்கப் பார்க்க செல்ல மணிக்குக் கோபம் பற்றிக் கொண்டு வரும்.

சமயங்களில் மனைவி கூப்பிடுவது கூட காதில் விழுவதில்லை. ‘சக்கு மாடு மாதிரி அப்படியே கிடவுங்கோ’ என்பாள் ‘சக்கு மாடா? செக்கு மாடா?’ என்று கேட்டுச் சிரிப்பேன்.

சனி ஞாயிற்றுக் கிழமைகளில் பிள்ளைகளோடு கத்துவது போதாதென்று என்னோடும் கத்துவாள். அதற்காக இந்த சனிக்கிழமை றேடியோ கேட்காமல் இருக்க முடியுமா?

மெதுவாக வெளியே சத்தம் கேட்காமல் வானொலியை கேட்கத் தொடங்கினேன். முடிந்து விட்டது. என் இனமே....... என் சனமே....... மனதுக்குள் ஒலித்துக் கொண்டு இருந்தது. அந்த பாடல் படலைக்குள் நிற்கும் ஆமிக்காரனுக்கும் கேட்டிருக்குமோ....

இப்போதெல்லாம் வவுனியா ஆமிக்காரங்களுக்கு தமிழ் நன்றாகத் தெரியும். கருத்து விளங்காத சொற்களின் பொருளை, போவோர் வருவோரிடம் கேட்டுத் தெரிந்தும் வைத்திருக்கிறார்கள்.

அன்றைக்கும் அப்படித்தான் பூவரசம் குளம் வீதியில் தன்னந் தனியே மோட்டார் சைக்கிளில் போய்க் கொண்டு இருக்கிறேன், ஒரு ஆமிக்காரன் மறிக்கிறான்.

நான் சைக்கிளை நிற்பாட்டவும் கிளச் அறுந்து போகவும் சரியாக் கிடந்தது. நான் என்னை அறியாமல் "அறுந்து போச்சு" எண்டு சொல்லிறன் அவன் கேட்கிறான் நான் மறிச்சதுக்கோ அப்படிச் சொன்னனி எண்டு. எனக்கு தலை விறைச்சுப் போச்சு...

இப்படி எத்தனை நாளுக்குத்தான் கிடந்து மாயுறது? வீடு வாசல்களில் நிம்மதியாக இருக்க முடிகிறதா? வீட்டு முற்றம் வரை வருகின்ற ஆமிக்காரர்களின் வரவையும், படலையடியில் அவர்களது நித்திய இருப்பையும் தவிர்க்க முடியவில்லை.

அடர்த்தியான அழகான வேலி அடைக்க முடியவில்லை. வெட்டு வெட்டு என்று கத்துகிறான். விளைவு வேலிகள் எல்லாம் பச்சையம் இழந்து வெறும் எலும்புக் கூடுகளாக நிற்கின்றன.

பக்கத்து வீட்டுக் காரனோடு சண்டை பிடித்துக் கொண்டு, உனக்கும் எனக்கும் நிரந்தர பகை என்று, வேலிக்கு கதியால் போட்டு, கம்பி கட்டி விட்டு இருக்க முடியவில்லை. மறுநாள் ஆமிக்காரன் வேலியை வெட்டிப் போட்டு உறவுப் பாலம் போட்டு விடுகிறான். கூடவே ஆடு மாடுகளும் அழையா விருந்தாளிகளாக வந்து விடுகின்றன. கன சனத்திற்கு இது தீராத பிரச்சினைதான்.

இந்த பிரச்சினை எப்போது தீரப்போகிறது? ஒவ்வொரு நாள் விடியலும் கேள்விக் குறியோடு தொடங்கி, விடையில்லாமல் கேள்விக்

குறியுடனே முடிகின்றதே. அன்றாட வாழ்க்கைப் போராட்டத்துக்கு மத்தியில் ஏதோ ஒன்று கிடைக்கப்போகிறது. அது நல்லதோ கெட்டதோ ஏதோ ஒன்று கிடைக்கப் போகிறது. கிடைக்கும் அது கட்டாயம் கிடைக்கும். இந்த வருடத்துக்குள் இல்லை ...அடுத்த வருடத்துக்குள் எனது எதிர்பார்ப்பு.... இல்லை ஒட்டு மொத்தமாக எல்லோருடையதுமான எதிர்பார்ப்பு.

"அப்பா தூக்கு...தூக்கு..."

என் மகன் வாசு பக்கத்தில் வந்து விட்டான். இனி வானொலியைக் கேட்க முடியாது. உயரமான இடத்தில் அதை வைத்து விட்டு அவனைத் தூக்கிக் கொண்டேன்.

"ஆமி மாமா..... ஆமி மாமா...."

சல்லடை வேலிக்கு மேலால் தெரிந்த தலையைப் பார்த்து விட்டுக் கூப்பிடுகிறான்.

ஓ....சொந்த மாமாவை காணாமல் போக கொடுத்து விட்டு உவனை மாமா என்கிறான்.

மனைவியின் பக்கம் செல்கிறேன். என்னைப் பார்க்காதது போல காரியத்தில் மும்முரமாக இருக்கிறாள். அவளுக்கு கோழிக் குஞ்சுக் கோபம். அவளை சீண்டிப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது. அருகில் சென்று வாசுவின் கால்களால் அவளைச் சுரண்டுகிறேன். இன்னும் முகத்தைக் கடுப்பாக்கிக் கொண்டாள்.

"கீச்" "கீச்" என்று கோழிக் குஞ்சு போல கத்திப் பார்க்கிறேன். வாசு தான் சிரிக்கிறான். அவள் என்னை முறைத்துப் பார்க்கிறாள்.

"என்னோட செல்லம் பொழிய வேண்டாம். எனக்கு கோழிக் குஞ்சு வாங்கித் தந்து போட்டு வேற கதை கதையுங்கோ"

பார்க்கப் பாவமாக இருந்தது. காலத்தின் சூழ்நிலை தெரியாமல் கதைக்கிறாள். எப்பவும் பிரச்சனை வரலாம், நான் மவுனமாக இருக்கிறேன். எனது மன ஓட்டத்தைப் புரிந்து கொண்டாள்.

"இந்த பிரச்சினையை சாட்டி எத்தின தேவைகள் செய்யேலாமல் கிடக்குது. ஒரு நல்ல கதிரை இருக்குதா? ஆரும் வந்தால் ஓடித்திரியேக்க மட்டும் வெட்கம் வரும்."

நான் மௌனமாக இருக்கிறேன்.அவள் சொல்வதில் துளி கூடப் பிழை இல்லை. சென்ற முறை இடம் பெயர்ந்து சென்ற போது பெறுமதியான பொருட்களை எல்லாம் தொலைத்து விட்ட அனுபவம், மீண்டும் அவற்றை தரமானதாக வாங்கிப் போட வேண்டும் என்ற மனநிலையை மாற்றிப் போட்டு விட்டது.

இதுவரைக்கும் நல்ல பெறுமதியான பொருட்களை வாங்கிப் போடவேண்டும் என்று முயற்சிக்கவும் இல்லை. சமாதான ஒப்பந்தம் முறிந்து போன கையோடு சண்டை வரப்போகுது என்ற எதிர் பார்ப்பில் எதையும் வாங்க நினைக்கவும் இல்லை.

"நான் கேட்ட நேரம் வாங்கித் தந்திருந்தால் இப்ப கோழி முட்டை போடத் தொடங்கியிருக்கும். நாட்டு முட்டை பன்னிரண்டு ரூபா விற்கேக்க நெடுக விலை கொடுத்து வாங்க முடியுமோ?"

'யாழ்பாணத்தில முப்பது ரூபா விற்குதாம். அங்க எல்லோரும் கோழி வளர்த்துக் கொண்டா இருக்கினம்?' விதண்டா வாதமாய் கேட்க வேண்டும் என நினைத்துக் கொண்டாலும் சூழ்நிலை கருதி வாயை மூடிக் கொண்டேன்.

"செய்தி முழுக்க கேட்டுப் போட்டு, பேப்பரையும் மணித்தியாலக் கணக்கா வாசிச்சுப் போட்டு சும்மா கதை விட்டுக் கொண்டு இருக்கத்தான் தெரியும். அவரும் அவற்றை சண்டையும்."

அப்பாடா ஒரு வழியாக மனைவியின் வாய் மூடிவிட்டது. நாட்டு நடப்புகளை வரி வரியாக வாசித்து, விலா வாரியாக கேட்டுப், பகுத்துப், பிரித்து தேர்ந்த ஒரு ஆய்வாளனாக கருத்துக்களை முன் வைக்கும் என்மீது அவள் கொண்டிருந்த நம்பிக்கை குறைவடையத் தான் செய்யும். பின்னே இருக்காதா என்ன !

குடும்ப வாழ்வில் இருவருக்கும் கருத்து வேறுபாடு இல்லாத ஒற்றுமை இருக்கலாம். ஆனால் இது.... அரசியல் தொடர்பானது. நாளுக்கு நாள் விதம் விதமான மாற்றங்களோடு ஜால வித்தை

காட்டும் அரசியலை நம்பி, நடக்கும் நடக்காது என்ற தளம்பல் நிலையை நம்பி, எனது குடும்ப வாழ்வை பணயம் வைக்க எனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?

மனதுக்குள் ஒரு குரல் உறுமிக் கேட்கிறது. 'வெறும் எதிர் பார்ப்பை மட்டும் ஆதாரமாகக் கொண்டு உன் செல்ல மனைவியின் நியாயமான ஆசையை மறுத்துரைப்பது உனக்கு அழகாடா மடையா?' என்று கேட்கிறது.

அழகில்லைத் தான். சண்டை வந்தால் வரும் போது பார்த்துக் கொள்வது. சூரியன் வரவால் அழிந்து விடும் பனித்துளி தான் அழியும் வரை வர்ண ஜாலம் காட்டுவதில்லையா?

நானும் நினைக்கிறேன். சண்டையைச் சாட்டிக் கொண்டு, நகர்ந்து செல்லாமல், சதா காலமும் எதிர் காலக் கனவுகளுக்குள் சிக்கிச் சீரழிவதை விட செல்லமணியின் கோழிக் குஞ்சுக் கனவுக்குள் என்றாலும் நிஜத்தை காணலாம். துணிந்து விட்டேன்.

* * *

மாலைப் பொழுதின் மயக்கத்தில் "கீச்கீச்" என்று கத்திக் கொண்டிருக்கும் குஞ்சுகளுக்கு அரிசிக் குறுணலை தனது கைகளில் வைத்துக் கொடுக்கிறாள். அவை அவளது உள்ளங் கைகளையும் சேர்த்துக் கொத்தும் வலியில்லாத இன்பத்தில் திளைத்தபடி குதூகலிக்கும் மனைவியைக் கடைக் கண்களால் கவனித்துக் கொண்டிருக்கிறேன். என் உள்ளமும் குதூகலிக்கிறது. சீண்டிப் பார்க்கும் ஆவல் துளிர்க்கிறது.

"சண்டை வந்தால் என்னப்பா செய்வாய்"

"அத அப்ப பாப்பம்"

சட்டென்று பதில் கொடுத்து விட்டு குஞ்சு ஒன்றைப் பிடித்து கொஞ்சுகிறாள்.

நான் மனைவியைப் பார்த்துக் கொண்டே இருக்கிறேன். அவள் நிஜத்துக்குள் குதூகலிக்கிறாள். ஆனால் நான்......

* * *



# 9 பெரியபிள்ளை

நான் வகுப்பில் முதலாம் பிள்ளை மட்டுமில்லை, கடைசிப் பிள்ளையும் கூட. எல்லாரும் என்னைப் பெரிய பிள்ளை என்று கடைசியில் தள்ளி விடுவினம்.

எனக்கு முன் வரிசையில் நிற்க விருப்பம். ஆனா யாரும் விடமாட்டினம். நான் வளத்தியாம் எண்டு பின்னுக்குத் தான். அதனால் இப்ப எல்லாம் யாரும் சொல்லாமலே நான் கடைசியாய் நிற்பன்.

எங்கட அப்பா சரியான உயரம். பெரிய பெரிய கைகள். நான் அப்பாவைப் போல் எண்டு எல்லாரும் சொல்லுவினம். எனக்கும் சந்தோசம் தான் எங்கட அப்பா நல்லவர். ஆனா பள்ளிக்கூடப் பிள்ளையள் என்னை கொக்கு எண்டு சொல்லேக்க ஏனடா அப்பாவைப் போல வளர்ந்தோம் என்றிருக்கும்.

எங்கட அம்மாவும் நல்லம் தான். என்ன கேட்டாலும் சலிக்காம செய்து தருவா. அவவுக்கு விருப்பமில்லாத விசயம் எண்டா மட்டும் அப்பாவைக் கேளுங்கோ என்பா. அப்பாவும் தான்

தனக்கு விருப்பமில்லாத விசயம் எண்டா அம்மாவை கேளுங்கோ என்பார்.

ஆனா இரண்டு பேருமே ஒரு விசயத்தைச் சொல்லித் தருகினம் இல்லை. எனக்கு இப்ப கொஞ்ச நாளா ஒரே யோசனை. இரவில நித்திரையும் வருகுது இல்லை.

அண்டைக்கு கமலம் மாமி வந்தவ. என்னை நல்ல வடிவா பார்த்தா. அம்மாட்ட சொன்னா “மகள் இந்த வருசம் பெரிசாயிடுவாள் போல கிடக்கு” எண்டு.

அதுக்கு அம்மா என்ன சொன்னவ தெரியுமே.

“ஓமோம் இப்ப பத்து வயது முடிஞ்சிருக்கு ஆனா ஆள் பெரிய வளத்தி. நானும் பதினொரு வயசில தானே பெரிசாகினேன். இவளையும் சொல்லேலாது” எண்டா.

எனக்கு அண்டைக்குப் பிடிச்ச யோசனை தான். ஒரே நாளில் என்னெண்டு பெரிசாகிறது. நான் சின்னப் பிள்ளையா தவண்டு, திரிஞ்சு, இப்ப ஓடி ஆடித் திரியிற சிறுமியா வளர பத்து வருசம் ஆகியிருக்கு. ஆனா மாமி சொல்லுறா நான் இந்த வருசம் பெரிசாயிடுவன் எண்டு. எனக்கு அதுதான் விளங்க இல்லை.

மாமி போனப் பிறகு அம்மாட்ட கேட்டன். பெரிசாகிறது எண்டா என்னம்மா எண்டு. அம்மா ஒருக்கா என்ர முகத்தைப் பார்த்தா. பிறகு பார்க்கேல்ல. அதெல்லாம் பிறகு தெரியும் எண்டு சொன்னா.

ஏன் இது சொல்லக் கூடாத விசயமோ உவவிட்ட கேட்கிறத விட அப்பாட்ட கேட்டா நல்லம். அப்பா ஒரு நாளுமே மறுக்க மாட்டார். அப்பாட்ட அண்டைக்குப் பின்னேரமே கேட்டன். அப்பாவும் அம்மாவைப் போல என்னைப் பார்த்தார். பிறகு “அம்மாட்ட கேளுங்கோ” எண்டார். எனக்கு விளங்கிப் போட்டுது. அப்பாவுக்கும் சொல்ல விருப்பம் இல்லை. அதுதான் அம்மாட்ட கேக்கச் சொன்னவர்.

அதுக்குப் பிறகு இரண்டு நாளாய் எனக்கு மண்டைக் குடைச்சல். என்ர வகுப்பில படிக்கிற மாலினியக் கேட்டன். அவளுக்கும்

தெரியாதாம். ரீச்சரிட்டக் கேட்கலாம் எண்டா அவவைப் பார்க்கவே பயமாக் கிடக்கு.

ரீச்சர் கேட்கிற பொது அறிவுக் கேள்விக்கெல்லாம் டக்கென்று பதில் சொல்லிற அரவிந்தனைக் கேட்டுப் பார்ப்பம் எண்டு நானும் மாலினியும் கேட்டம்.

அவனுக்கு நல்ல வடிவாத் தெரிஞ்சிருக்கு. அவங்கட அக்காக்கு கொண்டாட்டம் வச்சினமாம். சாறி உடுத்து, சங்கிலி காப்பெல்லாம் போட்டு, நீளமா தலை பின்னிப் பூ வைச்சு, வீடியோ எல்லாம் எடுத்து பெரிய விருந்து வச்சினமாம். அவங்கட அக்கா அண்டைக்கு பெரிய மனிசி மாதிரி இருந்தாளாம்.

தன்னை விட அவங்கட அண்ணாவுக்கு நிறையத் தெரியுமாம். அவன் தான் கொண்டாட்ட வேலையெல்லாம் செய்தவனாம். அவனைக் கேட்டா வடிவாச் சொல்லுவான் என்றான்.

அப்ப இது எல்லாம் செய்து சோடிக்க கனக்க காசு வேணுமே. நான் பெரிசாகிற விசயம் எல்லாம் அம்மா அப்பாட கையில தான் இருக்குது. இனி அவையள் கொஞ்சம் கொஞ்சமா காசு சேர்த்துத் தானே கொண்டாட வேண்டும்.

எனக்கும் ஆசையாத்தான் இருக்குது. அம்மாட தாவணியப் பிடிச்சுக் கொண்டு அதால என்னை மூடிக் கொண்டு விளையாடேக்க எவ்வளவு ஆசையா இருக்குது. நான் பெரிசா வளர்ந்தா என்ர தாவணிய நானே சுத்திப் பிடிச்சுப் பார்க்கலாம்.

நான் மாலினியிட்ட சொன்னன். எனக்கும் பெரிசாக ஆசையாக இருக்கு எண்டு. அவளும் தனக்கும் தான் ஆசையெண்டு சொன்னவள். ஆனா ரீச்சர் வந்தவுடன் என்னை மட்டும் காட்டிக் குடுத்துப் போட்டாள்.

“ரீச்சர் இவவுக்கு பெரிசாகிறதுக்கு ஆசையா இருக்காம்”

எங்கட ரீச்சர் என்னைப் பார்த்த பார்வை இருக்குதே

“இந்தக் கிழட்டுக் கதை கதைக்கத் தானே பள்ளிக்கூடம் வாறனி”

“அளவுக்கு மீறி வளர்ந்தா இந்தக் குணங்கள் நேரத்தோடயே வந்திடும்.”

என்னவோ எல்லாம் எனக்குத் திட்டினா.எனக்கு அரைவாசி மறந்து போச்சு. நல்ல வேளை இதுக்கே இப்பிடித் திட்டினா எண்டா, எங்கட சந்தேகத்தைக் கேட்டிருந்தா என்ன நடந்திருக்கும். நினைக்கவே தலை சுத்துமாப் போல இருக்குது.

என்னிலையும் பிழை தான். ரீச்சரை மாதிரி நானும் சாறி உடுத்த ஆசைப்பட்டது பிழைதானே. அதுக்கு அவவை மாதிரி பெரிசா வளர வேணுமே. அம்மா அப்பாவை கஸ்ரப்படுத்தக் கூடாது.அவைக்கு காசு கிடைக்கிற நேரம் கொண்டாடட்டும் எண்டு இருந்திட்டன்.

ஆனா அண்டைக்கு நடந்த சம்பவத்த என்னால மறக்கவே முடியேல்ல. பள்ளிக்கூடம் விட்டு வந்து உடுப்பு மாத்திறன் என்ர உள் பாவாடையில கிடக்கு. அட இண்டைக்கு சித்திரப் பாடத்துக்கு சிகப்பு வோட்டர் கலர் பாவிச்சு அச்சுப் பதிச்சனாங்கள். அதுக்கு மேல இருந்திட்டனோ. சந்தேகத்தில வடிவாப் பார்த்தன், இல்ல....எனக்குப் பயம் பிடிச்சுப் போட்டுது. நெஞ்சு வேகமாக ‘படக் படக்’ எண்டு துடிச்சுது. எனக்கு என்னவோ வருத்தம் வந்திட்டுது. ஐயோ! அம்மா இனி ஆஸ்பத்திரியும் கையுமாத் தான் திரியப் போறா. வருத்தத்துக்கு சிலவழிக்கத் தான் காசு காணும். இனி எங்க எனக்கு கொண்டாட்டம்.

எனக்கு பயமாக் கிடந்தது. அழுகை அழுகையா வந்தது. அம்மா அப்பாவைக் கவலைப் படுத்தக் கூடாது.
ஒருதரிட்டையும் சொல்லாமல் மறைச்சுப் போடுவம் எண்டு தான் முயற்சி செய்தன்.

ஆனா அம்மா நான் அழுகிறத பார்த்துப் போட்டா. என்ன நடந்தது எண்டதையும் கண்டு பிடிச்சுப் போட்டா. என்னைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு அழுதா. ஐயோ அம்மாவும் அழுகிறா எது நடக்கக் கூடாது எண்டு நினைச்சனோ அது நடந்து போட்டுது. அம்மாவும் கவலைப்படுகிறா.

ஆனா நடந்ததோ வேறு, நான் பெரிசாகி விட்டேனாம்.

அம்மா உடனே எல்லோருக்கும் சொல்லி அனுப்பினா. எல்லாரும் சிரிச்சுக் கொண்டு வந்தினம். அப்பா நிறைய முட்டை நல்லெண்ணை எல்லாம் வாங்கிக் கொண்டு வந்து அம்மாட்ட குடுத்துப் போட்டு என்னைப் பார்த்து சிரிச்சுப் போட்டு போறார்.

எல்லாரும் சந்தோசமா என்னை பகிடி பண்ணினம். அப்ப அம்மா அழுதது? ஆனந்தக் கண்ணீர் தான் அது எண்டு எனக்கு விளங்கிப் போட்டுது.

ஆனால் எனக்கு அம்மாவில சரியான கோபம். நான் அண்டைக்கு கேக்கேக்க உடனே சொல்லியிருந்தா எனக்கு இத்தனை நாள் மண்டைக் குடைச்சல் வந்திருக்காது. ரீச்சரிடம் அப்படி அவமானப் பட்டிருக்கத் தேவையில்லை. எல்லாத்தையும் விட அரவிந்தனின் அண்ணாட்ட விலாவாரியா இதைப்பற்றி கேட்க நினைச்சிருந்தமே அதை நினைக்க நினைக்க இப்பவும் கூச்சமா இருக்குது.

எல்லாம் தெரிஞ்ச அரவிந்தன் இந்த விசயத்தில மொக்கா இருந்தது நல்லதாப் போச்சு. அல்லாட்டி எங்களைப் பற்றி என்ன நினைச்சிருப்பான். ஆனா இப்ப எனக்கு ஒரு கவலை. இந்த விசயத்துக்காக எனக்கு கொண்டாட்டம் வைக்கக் கூடாது எண்டு நினைக்கிறன். எனக்கு கூச்சமாகக் கூட இருக்குது. இப்ப என்னுடைய வேண்டுதல் எல்லாம் என்ன தெரியுமே? கொண்டாட்டம் வைக்கிற அளவுக்கு அம்மாவுக்கும் அப்பாவுக்கும் காசு இருக்கக் கூடாது எண்டது தான்.

* * *



# 10 பால்வெள்ளை

வார்த்தைகளா அவை? அம்பாகப் பாய்ந்து இதயத்தில் ஆழச் செருகிய வேல்களல்லவா அவைகள். தீப்பிழம்பாகிச் சுட்டெரித்த சொற்களல்லவா அவை. வாசுகி துவண்டு போயிருந்தாள். கைகளையும் கால்களையும் அசைக்கக் கூட வலிமையின்றி கண்கள் தாரையாகச் சொரிந்து கொண்டிருந்தன.

மனோகரன் செய்வதறியாமல் திகைத்துப்போய் நின்று கொண்டிருந்தான்.அவனது கண்களில் நிறைந்திருந்த பரிவும் அமைதியும் மனைவியைப் பார்த்த மாத்திரத்தில் சோகத்தை உள் வாங்கிக் கலங்கிக் கொண்டிருந்தன.

“வாசு.. வாசு..”

இடைவிடாத அவனது அழைப்பில் ஏதாவது ஒரு வாசுவுக்கு மட்டும் அவளிடமிருந்து ம்...என்ற திடீர் முனகல், நிலை குத்திய பார்வை,விம்மல் ,திடீர் திடீர் என்று தான் பற்றிக் கொண்டிருக்கும் பொருளை நொருக்குவது போன்ற வேகத்தில்

இறுக்கிக் கொண்டு......வாசுகிக்குள்ளே என்ன நடந்து கொண்டு இருக்கிறது? தனது மன ஆதங்கத்தை வெளிக்காட்டுகிறாளா? அல்லது உணர்ச்சி வேகத்தைக் கட்டுப் படுத்துகிறாளா? மனோகரனால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

அவனது உள்ளத்தில் வாசுகியைப் பற்றிய எண்ணங்கள் அலையாகப் புரண்டு எழுந்து அவனை அமுக்குகின்றன. வாசுகி எப்படிப்பட்டவள்? சண்டைக்காரியா? இல்லை சதி வேலை செய்பவளா? அதுவும் இல்லையே...அப்படியாயின் படிச்ச சனியாக எப்படிப் பெயர் வாங்கினாள்?

இன்றைக்கு நேற்றா வாசுவை அவனுக்குத் தெரியும். ஐந்து வயது முதலே அவளது சின்னஞ் சிறு விரல்களைப் பற்றிக் கொண்டு திரிந்தவனல்லவா? அவளது கைவிரல்களை மண்ணிலே தேய்த்து ஆனா, ஆவன்னா எழுதுவித்தவனல்லவா! அந்த சிறுமி வாலைக்குமரிப் பருவத்தில் குலுங்கிய போது மனதில் தோன்றியது நட்பா காதலா எனப் பிரித்தறிய முடியாது தடுமாறி,காதல் தான் என்று சான்றுகளைத் தேடித் தொகுத்து அவளைக் கரம் பிடித்தவனல்லவா அவன்.

ஓ...இன்று போல இருக்கிறது. வாசுகி புதுமணப் பெண்ணாக வீட்டுக்குள் நுழைந்த அந்த நாள். ஒரு தேவதையைப் போல அவள் வந்ததாக ஒரு நினைவு. பொன்னிற அகலக் கரை போட்ட சிகப்பு நிறக் கூறைச் சேலையில் மலர் மாலை கழுத்தை அலங்கரிக்க ஒய்யாரமாக அவள் அமர்ந்திருந்த கோலம் நேற்றுப் போல இருக்கிறது.ஆ.....வருடங்கள் பறந்தோடிப் போன விதமே தெரியவில்லை. மனோகரனின் சின்னத் தங்கச்சி அப்பொழுது என்ன கேட்டாள்.

"அண்ணனோட தான் இண்டைக்குப் படுப்பன்"

அங்கிருந்த எல்லோருமே கொல்லென்று சிரித்தனர். தனது இடத்தை விட்டுக் கொடுக்கக் கூடாது என்ற ஆதங்கம் அந்த ஒன்பது வயதுச் சிறுமியின் உள்ளத்தில் உறுத்திக் கொண்டிருந்ததை மனோகரன் உணர்ந்து கொண்டான்.

பிடிவாதமாக அன்று அண்ணனுடனும், அண்ணியுடனும் உறங்கச் சென்றதும், பெரியக்கா அவள் முதுகில் அடிபோட்டதும்

இன்று போல இருக்கிறது. பல நாட்கள் இருவருக்கும் நடுவில் கிடந்து கொண்டு செல்லம் பொழிந்து கொண்டு கிடப்பாள்.

அவளைச் சீவிச் சிங்காரித்து பள்ளிக்கூடம் அனுப்பியவள் வாசுகி. திருமணத்திற்கு முன்னரே பெற்றெடுத்து விட்ட குழந்தையாக அல்லவா லதா வளர்ந்தாள். வளர்த்த கடா மார்பில் பாய்ந்து விட்டதோ!

கண்டிக்கும் நேரத்தில் கண்டித்து, சிரிக்கும் நேரத்தில் சிரித்து, அழுது கோபித்து, எப்போதும் போல் ஒன்றாக கிடந்து, புரண்டு, வீட்டு வேலைகளை தனது வேலை என்று செய்து வளர்ந்தவளுக்கு என்னாச்சு?

சீப்பு முதலாக தேனீர் குடிக்கும் கோப்பை வரை தனக்கு தனக்கு என்று தனியே எடுத்து வைக்கும் அளவுக்கு தனிமைப்பட்டு ,நான் வேறு நீங்கள் வேறு என்று கண்டு பிடித்து நடக்குமளவுக்கு வாசுகி என்ன தான் செய்தாள்?

'நான் என்ன வேலைக்காரியா?' என்று கேட்கும் அளவுக்கு ,தாய் போன்றவளை சனியனே என்று திட்டுமளவுக்கு என்ன செய்தாள்? தீப்பிடித்தது போன்று துடித்து துவண்டு போன இவளுக்கு என்ன ஆறுதலைக் கூறுவது.

மனோகரனுக்கு புரிந்தது. வாய் பேச முடியாத மௌனியாகிக் கனத்த இதயத்துடன் கண்களை மூடிக்கொண்டான்.

லதாவின் எண்ணப் போராட்டம் முகத்தில் பிரதி பலித்துக் கொண்டிருந்தது.ஆயிரம் காலத்து உறவைப் பிடுங்கித் தீயில் போட்டு விட்டு மிரள மிரள விழிக்கும் குழந்தையாக அவள் மனம் பேதலித்துக் கொண்டிருந்தது.

அவளது கோபம் இப்போது பங்கஜம் மாமியின் மீது திரும்பியிருந்தது. பங்கஜம் மாமியின் வரவு அவளுக்கு புது உற்சாகத்தைக் கொடுத்தது என்னவோ உண்மைதான்.

மாமி அப்படி ஒரு அழகி. அவள் குரல் கூட தித்திப்பாக இருக்கும். உரிமையோடு அவள் நடந்து கொள்ளும் விதம் லதாவுக்கு

அவளை நிறையவே பிடித்திருந்தது. இவ்வளவு காலமும் இந்த மாமியைத் தொலைத்து விட்டிருந்தேனே என்ற எண்ணம் அவளுக்கு அடிக்கடி தோன்றும்.

மாமி அப்பாவுக்கு தூரத்து உறவு, சின்ன வயதிலேயே விரும்பியவனை திருமணம் செய்து கொண்டு வீட்டை விட்டு வெளியேறி, காலச் சக்கரம் அவளைச் சுழற்றிக் கொண்டு இங்கு கொண்டு வந்து விட்டிருக்கிறது. இப்போது அவளுக்கு எஞ்சிய தெல்லாம் உடைந்து போன மணவாழ்வு மட்டுமே.

ஒற்றை ஆளாக ஒடுங்கிப் போயிருந்த மாமிக்கு லதாவோடு ஒட்டுறவு அதிகமாகவே இருந்தது. இந்த ஒட்டுறவு மெல்ல மெல்ல நஞ்சாகும் என்பது மனோகரனுக்குகோ, வாசுகிக்கோ, ஏன் லதாவுக்கோ கூட புரிந்திருக்கவில்லை.

லதா வேலை செய்யும் சுறுசுறுப்பைப் பார்த்துக் கொண்டிருக்கும் மாமியின் வாய் சும்மா கிடக்காது.

“உனக்கு அண்ணி நல்லாத்தான் வேலை பழக்கியிருக்கிறா”

“ஏன் செய்யக் கூடாதோ?”

“நான் எல்லாம் முந்தி ஒரு வேலை கூட செய்ய மாட்டன் எனக்கு சரியான கள்ளம். அம்மாதான் பேசிப் பேசி செய்வா.

பங்கஜம் மாமி என்ன சொல்ல வருகிறாள். என்னை பாராட்டுகிறாளா? அல்லது அம்மா இருந்தா செய்திருக்கத் தேவையில்லை என்றா?அல்லது அம்மா இல்லை என்று நினைவூட்டுகிறாளா?

அம்மாவின் முகம் மறக்கக் கூடிய பருவத்தில் அவ இல்லாமல் போய் விட்டா. ஆனால் முகம் மறக்கவில்லை. வீட்டு வரவேற்பறையில் பெரிய அளவில் மாட்டப் பட்டிருக்கும் அம்மா அப்பாவின் புகைப்படங்கள் அவர்களை நினைவுறுத்திக் கொண்டு இருக்கும். தாயைப் போல தான் இருப்பதில் அவளுக்கு உள்ளூரப் பெருமை.

ஆனால் அந்தப் பெருமித உணர்வு இப்போது கொஞ்சம் கொஞ்சமாக ஏக்கமாக உருவெடுத்துக் கொண்டிருந்தது.

“கொம்மாவை அப்படியே உரிச்சு வைச்சிருக்கிறாய், உன்னைப் போலத்தான் அவவுக்கும் நீட்டு முடி.... மனிசி இருந்திருந்தால் இப்ப உன்னைப் பார்த்து கொண்டாடிக் கொண்டிருக்கும்”.

அம்மா இருந்திருந்தால் நல்லம் தான். ஆனால் இவ்வளவு காலமும் அம்மா இல்லாதது போலத் தெரியேல்ல..இப்ப மாமி சொல்லச் சொல்ல இருந்திருக்கலாம் போல இருக்குது.

“என்னைக் கலியாணம் கட்டினவரின்ர வீட்டுக்காரரால நான் பட்ட துன்பம் இருக்குதே... அவற்றை தாய்.. அதுதான் என்ர மாமி.. அந்த மனிசி என்னை இருத்தி எழுப்பிப் போடும்... உங்கட அண்ணிக்கு உங்கட அம்மா செத்துப் போனது வாச்சுப் போச்சு.. அதுதான் அவவிட சொல்லுக்கு நீ ஆடுறாய்”

“ஆடுறதெண்டால்...பெரியாக்களின்ர சொல்லை கேட்கத்தானே வேணும். அது தவிர அண்ணி எனக்குத் தீங்கு ஒண்டும் செய்யிற மாதிரித் தெரியேலயே.. எண்டாலும் அம்மா செத்தது அவவுக்கு கொஞ்சமெண்டாலும் சந்தோசமாத் தான் இருந்திருக்கும்..”

லதாவுக்குள் மெல்ல மெல்ல வாசுகி பற்றிய எதிர் எண்ணங்கள் தலைகாட்டத் தொடங்கின.

தான் ஒரு அநாதை என்ற உணர்வுடன் பங்கஜம் மாமியின் அகலச் சிறகுக்குள் அடைக்கலமாகும் குருவிக் குஞ்சாக ஒடுங்கிக் கொண்டாள். அண்ணியின் முகம் பார்க்கப் பிடிக்கவில்லை. அவளுடன் பேசப் பிடிக்கவில்லை. அவள் சொல்லும் சொற்களின் உள் நோக்கம் பற்றி அறியத் துடிக்கும் அவா மேலோங்கியது. மாமியின் துணையுடன் புதுப் புது அர்த்தங்களைக் கற்பிதம் செய்ய முடிந்தது. எனக்கு இப்ப இருபதுக்கு மேல வயசு... நான் ஏன் அடங்கிப் போக வேண்டும் என்ற உணர்வு மேலோங்கியது.

வீட்டுக்குள் ஏதோ ஒரு அமுக்கத் தன்மை உருவாகி வருவதை வாசுகியும் மனோகரனும் உணர்ந்து கொண்டனர்.

நேற்றைய நாள் விடிந்திருக்கக் கூடாது என்று இப்போது லதாவுக்குப் பட்டது. அற்ப விடயம் ஒன்று பூகம்பமாகி... புயலாகி... இதோ இப்போது இப்படியாகி....

லதா தன் தலையில் தானே ஓங்கிக் குட்டிக் கொண்டாள். ‘என்ன வார்த்தை சொன்னேன் நான்’ நேற்று நான் அவ்வளவு கேவலமாக நடந்து கொண்டதற்கு அப்படி என்னதான் நடந்தது..

அண்ணி சமையலறைக்குள் வந்த போது அந்த கிழட்டு வெள்ளைப் பூனை காய்ச்சி வைத்த பாலில் வாய் வைத்துக் கொண்டிருந்தது.

அது பாய்ந்த வேகத்தில் பாலைக் கவிழ்த்துக் கொட்டி ஓடிய போது வாசுகி கோபப் பட்டாள்.

“லதா உனக்கு எத்தின தடவை சொல்லிறது பாலைக் காய்ச்சினால் மூடி வை எண்டு.. இப்ப பார்.. பூனை வாய் வைச்சுப் போட்டுது.. அநியாயமாப் போச்சு”

லதாவுக்கு பங்கஜம் மாமி சொன்னது ஞாபகம் வந்தது ‘பாத்தியா வேலை செய்யிறதும் பத்தாம நீ ஏச்சும் கேட்க வேண்டியிருக்குது.. நீ நெடுகலும் வாய மூடிக் கொண்டிரு..’

சுரீரென்று உச்சந் தலையில் கோபம் ஏற அண்ணியை முறைத்துப் பார்த்தாள்.

“என்ன லதா பாக்கிறாய்.. இதெல்லாம் எப்ப பழகப் போறாய்?”

“ஏன் இவ்வளவு நாளும் பழக்கினது காணாதோ..”

வாசுகியின் பார்வையில் அதிர்ச்சி அப்பட்டமாகத் தெரிந்தது. “என்ன லதா சம்மந்தமில்லாம கதைக்கிறாய்... செய்யிறத சரியாய்ச் செய், பொறுப்பாய்ச் செய்..”

லதாவின் உடல் நடுங்கத் தொடங்கியது.

“நான் ஒண்டும் உங்கட வேலைக்காரி இல்ல..”வார்த்தைகள் உச்சத் தொனியில் வெளிவந்தன.

வாசுகி விக்கித்துப் போய் நின்ற அந்தக் கணத்தில் மனோகரனின் வரவு லதாவுக்கு இன்னும் எரிச்சலை அள்ளித் தெளித்தது.

"லதா அண்ணியோட என்ன கதை கதைக்கிறாய்.."

"நான் சரியாய்த்தான் கதைக்கிறன்.. நான் செய்யவும் வேணும் பிறகு அவயளிட்ட பேச்சும் கேட்க வேணும்.."

யார் அந்த அவயள்? இந்தச் சொல்லில் தாம் இருவரும் எங்கோ ஒரு தொலை தூரத்தில் தள்ளப்பட்டதைச் சட்டென்று உணர்ந்து கொண்டான்.

"லதா வாய் காட்டாத.."

"ஓ... நீங்கள் உங்கட மனிசியின்ற சொல்லக் கேட்டுக் கொண்டு என்னைத் திருத்த வாங்கோ...நான்.."

லதாவின் வார்த்தைகள் முடியவில்லை. மனோகரனின் கை அவள் தலைமுடியைக் கொத்தாகப் பிடித்திருந்தது.

நிலைமையின் விபரீதத்தை உணர்ந்த வாசுகி அவனுடன் மல்லுக்கட்டி அவளை விடுவித்தாள். லதா ஆங்காரம் கொண்டவளாகக் கத்தினாள்.

"சனியன் சனியன் எப்ப எங்கட குடும்பத்துக்குள்ள வந்துதோ தெரியேல.. எங்கட அண்ணையும் வளைச்சுப் போட்டுது.. இதுகளிட்ட அம்பிட்டு நான் சீரழிஞ்சு போறன்... எங்கட அம்மா அப்பா இருந்திருந்தால்... இப்படி வந்திருக்குமோ..
லதா கத்துகிறாள்.

"மாமி நான் உங்களோட வாறன். என்னை எங்கையாவது கூட்டிக் கொண்டு போங்கோ.."

பங்கஜம் மாமி அவளை இழுத்துக் கொண்டு அறைக்குள் ஒதுங்குகிறாள். வாசுகி படுக்கையில் போய் விழுந்தவள் இதுவரை எழும்பவே இல்லை. பங்கஜம் மாமி வாசுகியை சமாதானப் படுத்தச் சென்றவள் மனோகரனின் உக்கிரப் பார்வையில் எரிந்து சாம்பலாகாத குறையாக வெளியே வந்தாள்.

‘ஒவ்வொருவரும் தங்கட தங்கட சோலியைப் பார்த்துக் கொண்டு போனால் ஒருதருக்கும் தொல்லையில்லை..’ என்று மனோகரன் சொன்னது தன்னைக் குறித்துத் தான் என்பது அவளுக்கு விளங்கியது.

தான் என்ன பிழை செய்தேன் என்பதும் அவளுக்கு விளங்கவில்லை. லதாவுடன் அன்பாகத் தான் இருந்தேன். அது அவயளுக்குப் பிடிக்கேலப் போல... என்று எண்ணிக் கொண்டாள்.

ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லிக் கொண்டு அன்று மாலையே மாமி புறப்பட்ட போது லதா அவளுடன் போக எத்தனிப்பதும் மாமி மறுப்பதும் தெரிந்தது. மாமி போய் விட்டாள்.

இரவு முழுவதும் நித்திரை வரவில்லை. லதா சுவர் ஓரம் ஒட்டிக் கொண்டு கிடந்தாள். வாசுகி புலம்புவது தெளிவாகக் கேட்கிறது. “நான் என்ன பிழையப்பா செய்தனான்.. இந்தப் பிள்ளை ஏன் இப்படி என்னை வெறுக்குது..”

“எல்லாத்தையும் விட்டுத் தள்ளுங்கோ.. எங்கட தலையில இப்படி எல்லாம் பழி கேட்க வேணும் என்று எழுதிக் கிடக்கு...” மனோகரன் சமாதானம் கூறுகிறான்.

“ஐயோ அவளுக்கு மனசிலை கள்ளம் இல்லையப்பா... அந்த மனிசி தான் மாத்திப் போட்டுது..”

லதாவின் காதுகளில் அந்த வார்த்தைகள்.... மனதில் கள்ளமில்லை...எனக்கு... உண்மையாக இருக்குமோ... நான் நல்லாத் தானே இருந்தனான்... இப்ப தானே.... எனக்கு கோபம் வருகுது... மனதை ஏதோ செய்கிறது. என்றும் இல்லாதவாறு மனம் யோசிக்கத் தொடங்குகிறது.

ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரை அண்ணியின் செயற்பாடுகளை எண்ணிப் பார்க்கத் தொடங்குகிறது.

அண்ணி கலியாணம் முடிச்சு எங்கள் வீட்டுக்கு வரேக்க அவவுக்கு என்ர வயசு தானே இருக்கும். அந்தக் காலம் தொடக்கம் இந்த வீட்டுக்கு அவ சமைச்சுப் போடேக்க.. வேலை செய்யேக்க...

நான் இப்ப கேட்ட மாதிரி ‘நான் என்ன வேலைக் காரியா’ எண்டு கேட்டிருக்கலாம். ஆனால் கேட்கேல்ல..

இரவின் அமைதியில் லதாவின் எண்ணம் முழுவதும் வாசுகியைச் சுற்றியே வந்து கொண்டிருந்தது. இத்தனை காலமும் தன்னை ஒரு பிள்ளையாகப் பாவித்து வந்ததும்.. அவள் தமக்காகச் செய்த தியாகங்களும் ஒன்றன் பின் ஒன்றாக விரிந்து சென்றன.

தனது நன்றி கெட்ட தனத்தை நினைக்க அவமானமாக இருந்தது. பெற்ற தாய் செய்ததை விட பெறாத ஒருத்தி தாயாக நடப்பது அபூர்வம். அந்த அபூர்வம் இத்தனை காலமும் தனது வீட்டில் நடந்ததை மறந்து அவளை வார்த்தைகளால் சுட்ட கணங்களை எண்ணி வருந்தியது.

நெடும் பொழுதாய் அந்த இரவு கழிந்தது.

விடியற் காலையில் அண்ணியின் புலம்பல் அடங்கியிருந்தது. ஆனால் அண்ணன் தான் வாசு... வாசு... என்று புலம்பத் தொடங்கியிருந்தார்.

லதா மெல்ல எழுந்திருந்தாள். அவளுக்கே உரித்தான பிடிவாதமான நடை சற்றுத் தளர்ந்திருந்தது. அண்ணியின் முன்பாகப் போய் நின்று கொண்டிருந்த அவள் கண்களில் நீர் சொரிந்தது. அண்ணியின் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள். அவள் கரங்களைப் பற்றிக் கொண்டாள்.

“அண்ணி...” என்று அழைத்த மாத்திரத்தில் வாசுகியின் கரங்கள் அவளை அழுத்திப் பற்றின. கண்களை ஒருமுறை மூடித் திறந்தாள்.. அருவி கொட்டியது.

“நான் பேசியது பிழைதான் அண்ணி.. இனி இப்படி நடக்க மாட்டன்..” விசும்பல்கள் வெடித்துக் கிளம்பின.

வாசுகியின் கைகள் உயர்ந்து அவள் தலையைத் தடவின. முதுகை வருடின.

அண்ணி என்னை மன்னித்து விட்டாளோ! சில வேளை அம்மா இருந்திருந்தால்... இப்படித்தான் தடவி இருப்பாளோ!

மனோகரனின் இதழ்க் கோடியில் ஒரு புன்னகை அரும்பியது.

* * *



# 11 துரோகம்

பிள்ளையார் கோவில் மணி "கணீர் கணீர்" என்று ஒலித்துக் கொண்டிருந்தது. சின்னையாவின் காதுகளுக்கு இது ஒன்றும் புதிதல்ல. இரவு முழுவதும் நித்திரை வராமல் புரண்டு புரண்டு மணி ஒலிக்கும் வரை காத்திருப்பார். முந்தைய காலம் என்றால் கோவில் மணிதான் அவரை எழுப்பி விடும் இப்போதோ....அவர் அறியாமல் மணி ஒலித்ததில்லை.

ஆழ்ந்த பெருமூச்சு ஒன்று அடிவயிற்றில் இருந்து கிளம்பி வந்தது.

"இன்னும் எத்தனை நாளைக்கு பிள்ளையாரப்பா..."

ஒவ்வொரு விடியலும் வேதனையின் விடியல்களாக அவருக்கு முத்திரை குத்தப் பட்டிருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்பென்றால் சூரியனுடன் கூடவே தானும் விழித்து, மாட்டுப் பட்டி துப்பரவு பண்ணி, பால் கறந்து, வயலுக்கு போவதற்கிடையில் பொழுது போதாதது போல் இருக்கும்.

இப்போது.....மூலையில் முடங்கிக் கிடந்து முகட்டு வளையோடு பேசிக் கொண்டிருக்கும் ஏகாந்த

தனிமை ....... ஓ........ காலம் எவ்வளவு கொடூரமானது இல்லாவிட்டால் குஞ்சும் குருமனுமான நான்கு பிள்ளைகளும் தலையெடுக்கும் முன் அவருக்கு இந்த விபத்து வந்திருக்குமா? கட்டை மாட்டு வண்டில் குடைசாய்ந்து அவர் உயிர் நிலையைத் தாக்கியிருக்குமா? எலும்புகளை ஆங்காங்கே நொருக்கியிருக்குமா? கூடவே ஏதேதோ பெயர் தெரியாத நோய்களையெல்லாம் கொண்டு வந்திருக்குமா?

சின்னையா மெல்ல நிமிர்ந்து உட்கார்ந்தார். குருடு பத்திக் கொண்டிருந்த அரிக்கன் விளக்கை சற்றே தூண்டி காலடியில் சுருண்டு கிடந்த பொன்னாவைப் பார்த்தார். அவருக்கென்று இன்றுள்ள ஆத்மார்த்தமான ஒரே துணை, குட்டியாக கொண்டு வந்து வேட்டைக்கு பழக்கிய காலம் தொடக்கம் அவரை பிரியாமல் இன்றுவரை ஒட்டிக் கொண்டிருந்தது.

தனது எஜமான் விழித்துக் கொண்டு விட்டதை உணர்ந்து பொன்னா வாலை ஆட்டியது. சின்னையா வாஞ்சையோடு "கறுத்தப்பொன்னா" என்று அதன் முதுகைத் தடவி விட்டுக்கொண்டார். அது முனகிக் கொண்டு வாலை ஒருமுறை உயர்த்தி காட்டிவிட்டு கண்களை மூடிக் கொண்டது.

குளிருக்காக மூட்டியிருந்த தீவறை விறகை நெருக்கி கைகளை சூடாக்கி கன்னங்களில் ஒற்றிக் கொண்டார். குளிருக்கு இதமாக இருந்தது. பொன்னாவைப் போலவே கறுத்திருந்த தண்ணீர்ப் பானையைத் தூக்கி தணலில் வைத்தார். குளிருக்கிதமாக நெருப்பைச் சேர்ந்தாற் போல நெருங்கிக் குத்திக் கொண்டிருந்த சின்னையாவின் மனதில் ஏதேதோ சிந்தனைகள் நரம்பு அறுந்த வீணை நாதமாக ஒலித்தக் கொண்டிருந்தன.

வயல்க் காவற் காலங்களில் குடிலில் தீவறை அமைத்து, விடிய விடிய காவல் காத்து, யானை கலைத்து, மாடு கலைத்து, வீடு நிறைய நெல்லு மூட்டைகளை அடுக்கி வைத்து அழகு பார்த்த காலம் மலையேறிப் போய்விட்டதே. இப்பொழுது அவரது நிரந்தர குடியிருப்பாகிவிட்ட இந்த அறை முன்பு நெல்லறையாக நிரம்பியிருக்கும். அவர் பிள்ளைகளைப் போல போற்றிய வயல் நிலங்கள் இன்று குத்தகைக்கு விடப்பட்டு யார் யாரோ

அனுபவிக்கிறார்கள். உழவு மாடு வண்டில் எல்லாம் அவர் விபத்தின் ஆரம்ப காலங்களிலேயே போய்ச்சேர்ந்து விட்டன.

தேனீர்ப் பானையில் தண்ணீர் கொதிக்கத் தொடங்கி விட்டது. தட்டுத் தடுமாறி சாயம் போட்டுத் தயாரித்த தேனீர் சூடாக நெஞ்சுக் குழிக்குள் இறங்கியது.அடுத்த அறைக் கதவு திறக்கும் ஓசை.......மனைவி கனகு விழித்து விட்டாள் போலும், இனி அவள் அன்றாட கடமைகளில் இலயித்து விடுவாள். ஓரிரு சமயம் அவர் இருக்கும் அறைக் கதவின் வாசல்வரை வந்து நின்று ஏதாவது சம்பிரதாயத்துக்கு கேட்பாள். மற்றும் படி எடுப்பது வைப்பது எல்லாம் பிள்ளைகளிடம் சொல்லித்தான்.

அழகி கனகுவை கைப்பிடித்த போது சின்னையாவிற்கு மனங்கொள்ளாத அளவு பெருமைதான். ஊர்ப்பெண்கள் பொறாமைப் படும் அளவிற்கு இடுப்பு வரை அடர்ந்த கூந்தல், வழுவழு என்ற கைகால்கள், இருவரும் சேர்ந்து வயல் காட்டுக்கு போகும் போது ஒரு இளவரசியைக் கூட்டிக்கொண்டு போகும் மிதப்பில் சின்னையா செல்வார். ஊர் ஆண்கள் தன்மேல் பொறாமைப் படுவதில் அப்படியொரு திருப்தி. நான்கு பிள்ளைகளுக்கு தாயான பின்னரும் வாளிப்புக் குறையாமல் இருந்த கனகு சின்னையா சோடிப் பொருத்தம் கடந்த இரண்டு வருடங்களாக கலகல என்று உடைந்து போய்விட்டது.கனகு இப்போதெல்லாம் அவரை வெளிப்படையாகவே உதாசீனப் படுத்த தொடங்கி விட்டாள். அவரது கையாலாகாத்தனம் அவரை மௌனமாக இருக்க வைத்து விட்டது.

கனகு கையில் விளக்குமாறு வாளியுடன் வாசல் படியைத் தாண்டி பட்டிக்கு செல்வது தெரிகின்றது. சின்னையா பெருமூச்சு விட்டுக்கொண்டார்.

பாவம் கனகு ஒற்றையாளாகக் கிடந்து கஸ்ரப்படுகிறாள். சிந்தனை கனகுவைச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தது. வண்டில் மட்டுமா குடை சாய்ந்தது? அவளின் வாழ்க்கையும் அல்லவா சாய்ந்து விட்டது. இல்லற இன்பம் பெற முடியாத உண்மையை ஊருக்கே மறைத்து....சின்னையாவின் உள்ளம் அவளுக்காக ஓலமிட்டு அழுதது.

"கடவுள் சதி செய்து போட்டார்". வார்த்தைகள் வெறுமனே வெளிவந்தன.

வாய் ஊறிக்கொண்டு வந்தது. துப்பல் சிரட்டையைத் தேடியபோது அது நிறைந்து போய்க் கிடக்கிறது.

"நிரம்பிப் போட்டுது மாத்தவேணும்...." சின்னையா மெல்ல மெல்ல எழுந்து சிரட்டையுடன் வருகிறார்.

பட்டிக் கடப்படியில் மூன்றாவது வீட்டு கதிரேசன் கனகுவோடு பேசிக் கொண்டிருப்பது தெரிகிறது. கனகு ஒருகணம் திகைத்தாற் போல பார்க்கிறாள். கதிரேசன் கையிலிருந்த வேப்பம் குச்சியை மீண்டுமொரு முறை சப்பித் துப்பிவிட்டு தூர எறிந்தான்.

"என்ன சின்னையாண்ண குளிருக்குள்ள வெளிக்கிட்டியள்?

"கிணத்தடிப்பக்கம் போறன் தம்பி"

"இண்டைக்கு கதிர் அறுப்புக்கு கனகு அக்காவை கேட்பம் என்று வந்தனான்....."

சின்னையா பதில் எதுவும் சொல்லாமல் நகர்ந்து சென்றார். கதிரேசனைப் பற்றி அவருக்கு நன்றாகவே தெரியும். அண்மைக் காலமாக ஏதாவது சாக்குப்போக்கு சொல்லி தினமும் இங்கு வந்து கொண்டிருக்கிறான். வயது வித்தியாசம் பாராமல் வரம்பு மீறிப் போகின்ற அவனின் குணம் அவருக்குத் தெரியும். அவன் எப்படியும் இருந்து விட்டுப் போகட்டும், அவருக்கு என்ன? கனகுவிடம் இந்த சேட்டைகள் எதுவும் செல்லாது என்பதுவும் அவருக்குத் தெரியும். எப்ப வாங்கிக் கட்டப் போகிறானோ என்று தனக்குள் எண்ணிக் கொண்டார்.

சின்னையா முகம் கழுவி விட்டுத் திரும்பிய போது கவனித்தார். கதிரேசன் பட்டிக்குள் இறங்கி இருந்தான். கனகு சிவப்பியில் பால் கறக்கும் இலாவகத்தில் அவன் இலயித்துப் போயிருப்பது அப்பட்டமாகத் தெரிந்தது.அவன் கனகுவை கண்களால் மேய்ந்து கொண்டிருந்தான்.

சின்னையாவுக்குள் ஏதோ நெருடியது. பொதுவாக பால் கறக்கும் சமயத்தில் கனகு யாரையும் பட்டிக்குள் அனுமதிப்பது கிடையாது. இவன்...கையில் போத்தலுடன் நின்று கொண்டிருந்தான்.

இப்போது பக்கத்தில் நான் போனால் என்ன சொல்லுவான். 'பால் வாங்கிக் கொண்டு போகப் போறன் அண்ணே' என்பான் சின்னையாவின் மனம் அவன் சொல்லப் போகும் பதிலை கணக்குப் பண்ணியது.

சின்னையா நிதானமாக சிரட்டையில் மண்ணை அள்ளி நிறைக்கும்போது கவனித்தார்.

கனகு எழுந்து அவனின் போத்தலுக்குள் கலயத்திலிருந்து பாலை ஊற்றுகிறாள். பால் நுரைபொங்கி வெளியே தள்ளுகிறது. போத்தலை வாங்கியபடி "மறக்க வேண்டாம் கட்டாயம்...."என்று கூறி கனகுவின் பின் பக்கத்தில் செல்லமாக தட்டிவிட்டுச் செல்கிறான்.

சின்னையாவின் தலை கிறுகிறுத்தது. கதிரேசன் எல்லை மீறிப் பழகுகிறான். இத்தனைக்கும் கனகு பத்திரகாளியாகி அவனின் கைகளை ஒடித்திருக்க வேண்டாமா? இல்லையே....வெறுமனே சிரித்துக் கொண்டிருந்தாளே.

சின்னையா தட்டுத் தடுமாறி தனது குகைக்குள் வந்து புகுந்து கொள்கிறார். ஆயிரம் எண்ணங்கள் அவரை அலைக்களித்து தள்ளுகின்றன. ஓ என்று கதறி அழவேண்டும் போல ஆங்காரம் எழுகிறது. பாறை... பாறை... மனமெல்லாம் பாறையாக அழுத்துகின்றது. அயர்ந்து துவண்டு போயிருந்த அவரோடு பொன்னாவும் ஒட்டிக் கிடந்தது.

அடுப்படிக்குள் இருந்து கனகம் 'திடும் திடும்' என்று வெளியே ஓடிவந்து முற்றத்தில் ஓங்காழித்து வாந்தி எடுக்கிறாள். சின்னையா சுய நினைவடைந்து வாசல் படியில் வந்து நின்று கொண்டார். கனகம் வயிற்றைப் பிடித்துக் கொண்டு உரத்த குரலில் மீண்டும் மீண்டும் ஓங்காழித்துக் கொண்டிருக்கிறாள். சின்னையாவுக்குள் புரிந்தும் புரியாமலும்.... நான்கு பிள்ளைகளை வரிசையாக பெற்றெடுத்த ஒவ்வொரு சமயமும் கனகு இப்படியே தான் முற்றத்தை ஆக்கிரமித்து ஊரையே கூட்டிக் கொண்டிருப்பாள்.

பக்கத்து வீட்டு முள்ளு வேலிக்கு மேலால் கமலாச்சியின் முகம் தெரிந்தது.

“என்ன கனகு விசேசமோ.....”கமலாச்சி கேட்டுவிட்டு கொடுப்புக்குள் சிரிக்கிறாள்.

“வருத்தக்காறன் என்றாலும் ஆள் பறவாயில்லை” கமலாச்சியின் வார்த்தைகள் சின்னையாவின் இதயத்தை ஊடுருவுகின்றது.

கனகு அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு மீண்டும் வாந்தி எடுக்கிறாள். பத்து நிமிடப் போராட்டத்தின் பின்னர் எழுந்து தள்ளாடிக் கொண்டு வரும் கனகு, வாசல் கதவு நிலையருகில் திகைத்துப் போய் நிற்கும் சின்னையாவைத் தாண்டிச் செல்ல முடியாமல் திகைத்த அந்தக்கணத்தில்,

“கனகு...”என சின்னையாவின் குரல் உடைந்து நடுங்குகின்றது. கனகு அவரை நிமிர்ந்து பார்க்கிறாள். அவரது கண்களில் குளங் கட்டியிருந்த நீர் குபுக்கெனப் பாய்ந்து பிரவாகிக்கின்றது. கணத்தில் கனகம் தலை குனிந்து கொண்டாள். உள்ளே சென்று மறைந்து கொண்டாள்.

சின்னையாவுக்கு உலகமே ஒரேயடியாக இருண்டு போய் விட்டது. பக்கத்து வீட்டு கமலாச்சி சொன்ன வார்த்தைகள்... ‘வருத்தக்காறன் என்றாலும் ஆள் பறவாயில்லை’ என்ற வார்த்தைகள் திரும்பத் திரும்ப செவிப்பறையில் வந்து மோதிக் கொண்டிருந்தன.

விபத்திற்குப் பின்னர் இந்த இரண்டு வருடங்களில் சின்னையா கனகத்தின் உடலை தொட்டுக்கூட பார்த்தது கிடையாது. கனகுவின் வெறுத்த பார்வை மட்டுமல்ல அவரின் இயலாமையும் அவளிடம் நெருங்க விடவில்லை. என்றாலும் அவள் இவ்வளவு விரைவாக மாறிப்போவாள் என்று அவர் கனவில்கூட எதிர் பார்க்காத ஒன்று. தான் புதையல் போல் போற்றிய பொருள் மாற்றான் கையில் அகப்பட்டுக் கொண்ட வேதனை, அவரை அன்று முழுவதும் நகரவிடாமல் பாயுடனே கட்டிப் போட்டு விட்டிருந்தது. தனது இயலாமையின் மீது ஆத்திரம் வந்தது. தன்னை நினைக்கவே அவமானமாக இருந்தது. இரவு முழுவதும் வெம்பி வெம்பி அழுது கொண்டிருந்தார். தன்னை நொந்து கொள்வதா? தன் மனைவியை நொந்து கொள்வதா? என்ற தடுமாற்றத்தில் கனகு....கனகு என்ற

வார்த்தைகள் விதம் விதமான வடிவத்தில் சத்தம் வராமல் வெளிவந்து கொண்டிருந்தன.

ஊணர்ச்சிப் பிழம்பாகி சின்னையாவை எரித்துக் கொண்டிருந்த அந்த இரவு மெல்லக் கரைந்தது.

பிள்ளையார் கோவில் மணி "கணீர் கணீர்"என ஒலித்தது. எப்போதும் அதன் ஓசையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சின்னையாவின் காதுகள் அடைபட்டுப் போய்க் கிடந்தன. வழமை போல் விளக்கு தூண்டுவார் இல்லாமல் குருடு பத்திக் கொண்டிருந்தது. கறுத்தப் பொன்னா மணி ஒலித்த போது தலையை நிமிர்த்தி தனது எஜமானைப் பார்த்துவிட்டு அவரின் மடக்கிக் கிடந்த கால்களுக்கிடையில் அவரின் விழிப்புக்காக காத்துக் கொண்டு கிடந்தது.

விடிந்தது....ஊரார் பேசிக் கொண்டார்கள் "எத்தனை நாளைக்குத்தான் மனிசன் நோயைத் தாங்குவது பாவம்....போய்ச்சேர்ந்திட்டுது"

கனகு தலைகுனிந்து கொண்டிருந்தாள். அவள் துரோகத்தின் கனம் தலையை அழுத்தியது. அவள் கண்களில் தெரிந்தது சோகமா? நன்றியா? திருப்தியா? என்று இனம் பிரிக்க முடியாத கலவை இவ்வளவு காலமும் அவரோடு வாழ்ந்ததன் சாட்சியாக இரு துளிக்கண்ணீர் சின்னையாவின் முகத்தில் விழுந்து தெறித்தது.சின்னையா ஆடாமல் அசையாமல் அமைதியாகக் கிடந்தார்.

* * *



# 12 தொல்லைபேசி

பஞ்சுப் பொதி போன்ற மேகங்களுக்குள் மிதந்து ...மிதந்து ...கால்களால் எம்பிக் குதித்துப் பறந்து மெல்லிய காற்றின் வருடலுக்குள் மயங்கி ஆ....இந்த பூமியில் இருந்து விடுபட்டு பேரானந்தப் பெரு வெள்ளத்தில் மிதந்து...என் கைகளை மெத்தென்று பற்றிக்கொண்டு அவள் வருகிறாள். என் மனைவி, அவள் முகத்தின் பேரொளி என்னை வசீகரிக்க ...அவளை இழுத்து அணைத்து முத்தமிட்டு தழுவல்கள் தொடரத் தொடர ....உடலும் உள்ளமும் மிதக்க மிதக்க ....

றிங்....றிங்.....றிங்.....றிங்.....

அந்தர வெளியில் மிதந்தவனை “டமால்” என்று பூமியில் இழுத்து விழுத்திய வேகத்தில் பட்டென்று கண்களை விழித்துக்கொண்டேன். இதயம் வேகமாக அடித்துக் கொண்டது.

றிங்....றிங்.....றிங்.....றிங்.....

தொலைபேசி அலறிக் கொண்டிருந்தது. ரேடியம் பூசிய மணிக்கூடு அதிகாலை மூன்று மணி எனக் காட்டியது. இந்த நேரத்தில் யாராக இருக்கும்?

“ஹலோ”

“நான் லண்டனில் இருந்து பரந்தாமன் கதைக்கிறன். இது சிவலிங்கம் அண்ணனின்ர வீடு தானே”

கர கரத்த குரலில் யாரோ தெரியாதவன் கதைக்கிறான்.

“ஓமோம் சொல்லுங்கோ நீங்கள் ஆர்?”

“நான் உங்கட பக்கத்து வீட்டில இருக்கிற பசுபதி அங்கிளின்ர றிலேசன்ஸ். அவரோட ஒருக்கா கதைக்கேலுமோ?”

“அவர் பக்கத்து வீடு இல்லை. இரண்டு வீடு தள்ளித்தான் இருக்கிறார். மற்றது இப்ப விடியப்புறம் மூன்று மணி, வெளியில் போகேலாது”

“அப்ப சரி அங்கிள். இண்டைக்கு அவற்ற பிறந்தநாள் நான் முதலில “விஸ்” பண்ணுவம் எண்டு எடுத்தனான். இனி ஏலாது நான் படுக்கப் போகிறன். நாளைக்கு எடுக்கிறன் எண்டு சொல்லுங்கோ தாங்ஸ் அங்கிள் வைக்கிறன்”

அங்கிளாம் அங்கிள். லண்டனில் இருந்து என்னை எழுப்பிறான். அவன்ர நாளைக்கு எண்டால் இன்னும் பன்னிரெண்டு மணித்தியாலம் கழித்து எடுப்பான்.

இதென்னடா ஆய்க்கினையாக் கிடக்குது. அ வ ன் பிறந்த நாள் காரன் பசுபதி நல்லா இழுத்து மூடிக்கொண்டு கனவு கண்டு கொண்டு கிடப்பான். அவனும் சிலவேளை மனைவியோடு மேகங்களுக்கிடையில் மிதந்து கொண்டு இருக்கலாம்.

ஆனால் நான் ...எனக்கும் அவனுக்கும் என்ன சம்மந்தம். அந்த லண்டன்காரன் இப்ப மூன்று மணி என்று தெரிந்து கொண்டும் என்னை எழுப்பிவிட்டு தான் படுக்கப் போயற்றான்.

றீசீவரை முறைத்துக் கொண்டு இருந்தேன்.

“என்னப்பா ரெலிபோனைப் பார்த்துக் கொண்டு நிக்கிறீங்கள். உதுக்குத்தான் நான் சொன்னனான் இரவில் நிப்பாட்டிப் போட்டு படுங்கோ எண்டு”

அவள் சொல்வதும் சரிதான். சத்தம் போடாமல் அவள் அருகில் படுத்துக் கொண்டேன்.

“சீ...... இனி நித்திரையும் வராது. இரவும் படுக்கப் பிந்திப் போட்டுது. பகல் முழுக்க ஓய்வும் இல்லை.....” புலம்புகிறாள்.... நியாயமான புலம்பல் தான். இருட்டில் அவள் முகத்தைப் பார்க்கிறேன். பஞ்சுக் கூட்டத்தில் மிதந்த போது இருந்த ஒளி தெரிகிறதா என்று. கனவில் கண்டது போல கைகளைப் பற்றிக் கொண்டு பறக்கலாமா? மெல்லத் தொட்டுப் பார்க்கிறேன்.

விருட்டென்று திரும்பிப் படுத்துக் கொள்கிறாள். இன்றைய விடியல் நாசமாகிப் போய்விட்டது.

* * *

லண்டன் நகரக் குளிருக்கு இதமாக கனத்த கம்பளிக்குள் பூனைக்குட்டிபோல் உறங்கிக் கொண்டிருந்த பரந்தாமனின் அணைப்புக்குள் மனைவி மதி இன்னொரு பூனைக்குட்டியாக புஸ்..புஸ்.. என்று என்று மூச்சு விட்டுக் கொண்டு கிடக்கிறாள்.

டட்டடடங் டங்.. டங்.. டட்டடடங் டங்.. டங்..

மெல்லிய இசையாக தொலைபேசி கிணு கிணுக்கிறது. கைகள் போர்வையை விட்டு வெளியே வர மறுக்கிறது.

“இஞ்சேருங்கோ போன் அடிக்குது எடுங்கோப்பா”

“ஊரில இருந்து தான் ஆரோ எடுக்குதுகள். உதுகளுக்கு நேர காலம் கிடையாது... ஒரு அலுப்புக் களைப்பென்று நிம்மதியாக கிடக்க ஏலாது.”

“சரியப்பா முழிச்சிட்டிங்க தானே, எடுங்கோவன்.”

“உமக்கு விருப்பம் எண்டா எடும். எனக்கேலாது. அடிச்சுப் போட்டு நிக்கும் தானே”

கூறிவிட்டு பரந்தாமன் காதுகளையும், தலையையும் சேர்த்து கம்பளியால் மூடிக்கொண்டான். ரெலிபோன் அடித்து அடித்து ஓய்ந்தது.

இங்கே ...

பிறந்த நாளை நினைவு வைத்திருந்த பரந்தாமனுக்கு நன்றி சொல்ல ரெலிபோன் எடுத்த பசுபதி, சிவலிங்கம் வீட்டுக் கதிரைக்குள் ஓய்ந்து போய் இருந்தார்.



நான் ....
தாயாய் சேயாய் தாரமாய் சேவகியாய் பல்வேறு
முகங்களை அணிந்த ஆன்மா
அடுப்பங்கரையில் சிறைப்பட்டுச் சிதையாதவள்...
குடும்பக் கூட்டுக்குள் கொஞ்சிக் குலாவி
இன்பம் காணும் வண்ணப் பறவை
பிரபஞ்ச வெளியைத் துழாவி நான் சிறைப்பிடித்த
மகரந்தத் துளிகள் இக்கதைகள்
இன்னும்...
என்னுள்ளே கனன்று... கனன்று கொப்பளிக்கக்
காத்திருக்கும் எண்ணங்கள் ஏராளம் சுமந்த
அந்தராத்மா நான்...
அதற்கான வார்த்தைகளைத் தேடித் தேடி
என் பயணம் தொடரும்
பயணத்திற்கு துணை வருவீர்களா....?

-றெலோமி-

9789559942016

Multivision. 024 2223669